விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 02 திங்கட்கிழமை (18.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 334

# இலங்கை மீது அழுத்தம் அவசியம்

## சர்வதேச மன்னிப்புச்சபை அறிவிப்பு

AMNESTY INTERNATIONAL

(கொழும்பு)

**இலங்கை மீது தொடர்ந்தும் சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்படல் வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.**

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கை போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் அல்லது சர்வதேச விசாரணை என எச்சரித்ததனை அடுத்தே சர்வதேச மன்னிப்புச் சபை மேற்படி திடீர் அறிவித்தலினை விடுத்துள்ளது.

இறுதிக்கட்டப் போரின்போது இலங்கையில் நடைபெற்ற மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரிக்கப்படல் வேண்டும் எனவும் மன்னிப்புச்சபை கூறியுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் ஸ்டீவ் கார்ஸோவ் தெரிவிக்கையில்,

இலங்கையில்நடைபெற்றுமுடிந்த போரில் அரச படைகளினாலபல்வேறுகுற்றங்கள்

19-ம் பக்கம் பார்க்க



கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டு நேற்றையதினம் நல்லூர் கந்தன் ஆலயத்தில் சொக்கப்பானை எரியும் காட்சி...

# இலங்கை மக்களை பிளவுபடுத்தாதீர்கள்

## வெளி. ஊடகங்களிடம் மகிந்த

(கொழும்பு)

இலங்கை மக்களை பிளவு படுத்த வேண்டாம் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனை கூறினார்.

அங்கு தொடர்ந்து பேசிய ஜனாதிபதி, தாம் முன்வைக்கும் கருத்துக்களுக்கு மதிப்பளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதற்கு வெளிநாட்டு ஊடகங்களின் நியாயமான உதவியும் அவசியம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில,

இலங்கையில் உள்ள சகல மக்களையும் பாது

19-ம் பக்கம் பார்க்க

# நியூசிலாந்து பிரதமர் மகிந்தவுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும பல்வேறு மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நியூசிலாந்துப் பிரதமர் ஜோன் கீ கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் இடம்பெறும் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாட்டில் பங்கேற்கச் சென்ற நியூசிலாந்துப் பிரதமர் ஜோன் கீ நேற்று ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போதே, இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இவ்விருவருக்கும் இடையில் சுமார் 15 நிமிடங்கள் வரை இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, இலங்கையில் இடம்பெறும் ஆட்கடத்தல்கள் உள்ளிட்ட மனிதவுரிமை மீறல்கள குறித்த விவகாரங்களே முக்கியமாகப் பேசப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையில் இடம்பெறும் ஆட்கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் நியூசிலாந்துப் பிரதமர் அதிக கவனம் செலுத்தியுள்ளார். இந்நிலையில்,

20-ம் பக்கம் பார்க்க

# பொதுநலவாய அமைப்பிற்கு ஜனாதிபதி மகிந்த தலைவரானார்

## மாநாடு நேற்றுடன் முடிபு

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பிற்கு அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு தலைமை பொறுப்பினை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டுள்ளார்.

இவ் வருடத்திற்கான பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெற்று நேற்றுடன் முடிபுற்றுள்ளதனையடுத்தே ஜனாதிபதி இத்தலைமை பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கை பல்வேறு பிரச்சினைக்கு மத்தியில் மீண்டெழுந்த ஒரு நாடு. இங்கு மனித உரிமைகள் தொடர்பில் திருப்தி அளிக்கிறது என பொதுநலவாய செயலாளர் கமலேஸ் சர்மா கூறியுள்ளார்.

எனினும் கமலேஸ் சர்மாவின் இக்கருத்திற்கு

19-ம் பக்கம் பார்க்க



# வவுனியாவில் நேற்று தீப்பந்தப் போராட்டம்



(வவுனியா)


காணாமல் போனவர்களை கண்டுபிடித்து தருமாறு கோரி வவுனியாவில் தீப்பந்தப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட காணாமல போனவர்களை தேடும் உறவுகள் சங்கம் மற்றும் பிரஜைகள் குழு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இப்போராட்டம் வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியில் இடம்பெற்றுள்ளது.

கார்த்திகைத் தீபத் திருநாளான நேற்று இடம்பெற்ற இந்தத் தீப்பந்தப போராட்டத்தில் பங்கேற்றிருந்த காணாமல் போனோரின் உறவுகள அரசியல்கைதிகளை விடுதலை செய், கடத்தப்பட்ட

20-ம் பக்கம் பார்க்க

# சுயாதீனமான விசாரணையை இலங்கை ஆரம்பிக்கும்

## வில்லியம் ஹேக் நம்பிக்கை



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதக்கட்டப் போரின் போது மேற்கொளளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் இலங்கை அரசாங்கம் சுயாதீனமான ஒரு விசாரணையை ஆரம்பிக்கும் என்று பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில இலங்கை அரசாங்கம் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் சுயாதீனமான ஒரு விசார

20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பிரிட்டன் பிரதமர் வந்தது சண்டித்தனம் காட்டத்தான்!

## அமைச்சர் சம்பிக்க சீற்றம்



(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மாநாடு இரு தரப்பு பேச்சு வார்த்தை நடத்தப்படும் இடமல்ல எனவும் அது பலதரப்பு பேச்சுவார்த்தை நடத்தும் இடம் எனவும் பிரித்தானிய பிரதமர் இலங்கைக்கு வந்து செருக்கான விதமாக செயற்பட்டதாகவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

பிரதமர் டேவிட் கமரூன் ஊடக வியலாளர் சந்திப்பொன்றை நடத்தி எதிர் வரும் மார்ச் மாதத்திற்கு முன்னதாக மனித உரிமை மீறல்கள் மீதான விசாரணை நடத்த வேண்டும் என்று கூறினார்.


எனினும் அவருக்கு அப்படி கூறுவதற்கான உரிமையில்லை. யாழ்ப்பாணத்திற்கு செல்லவும் ஊடக சந்திப்புகளை நடத்தவும் அவருக்கு உரிமையில்லை.

பிரித்தானிய பிரதமர் 1700 ஆண்டுகளில் போல் ஏகாதிபத்திய மனநிலையை காட்டினார். 1818 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் இடம்பெற்ற இனப்படு கொலைகள் பற்றி அவர் என்ன கூற போகிறார்?

பிரித்தானியாவில் 12 ஆயிரம் யானைகள் இருந்தன. கமரூனின் உறவினர்கள் அதனை 400 ஆக குறைத்தனர். இன்று அவர் எமக்கு இங்கு வந்து சமத்துவம் பற்றி போதிக்க பார்க்கின்றார்.

இலங்கை சிறிய நாடு என்பதால் கமரூன சண்டித்தனம் காட்ட வருகிறார். அங்கிருப்பது நிலப்பிரபுத்துவ கொள்கை கொண்ட ராணி.

சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்கள் இலங்கை வருவதற்கு இடமளித்ததும் தவறு. சனல்4 தொலைக காட்சி ஒப்பந்தம் ஒன்றையே நிறைவேற்றி வருகிறது என்றார்.



இந்த ஊடக வியலாளர் சந்திப்பில் உரையாற்றிய மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில,

புத்தரின் போதனைகள், பாலி மொழி போன்றவற்றை டேவிட் கமரூன் அறிந்திருந்தால் இப்படி பேசியிருக்க மாட்டார்.

இலங்கை மீது சுமத்தப்படும் போர்க்குற்றங்கள் பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று கூறும் பிரித்தானியா, அந்த நாடு ஏனைய நாடுகளில் மேற்கொண்ட போர்க் குற்றங்கள் குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இலங்கை இராணுவம் குற்றம் செய்திருந்தால் அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும். கடந்த காலங்களிலும் அவ்வாறு தண்டனை வழங்கப்பட்டது. இராணுவத்தினர் போர்க்குற்றங்களை செய்திருந்தால் அவற்றுக்கு சாட்சியங்கள் இருக்க வேண்டும் என்றார். (செ-11)

## சச்சின் ஓய்வு! ரசிகர் தற்கொலை



கிரிக்கெட் கடவுள் என்று புகழப்படும் சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றதால் மனவேதனை அடைந்த அவரது ரசிகர் ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தியாவின் குஜராத் மாநிலம் பூஜ் மாவட்டத்தில் உள்ள வார்லி கிராமத்தை சேர்ந்த இளைஞர் விஜய் கோவிந்த் (வயது 20).

சச்சின் டெண்டுல்கரின் தீவிர ரசிகரான இவர், கிரிக்கெட்டிலிருந்து சச்சின் ஓய்வு பெறுவதாக அறிவித்த நாளில் இருந்தே மிகுந்த மனவேதனையில் இருந்துள்ளார்.

இவர், கடந்த ஒரு வாரமாக தனது நண்பர்களிடம், சச்சின் ஓய்வு பெறும் நாள்தான் தன் வாழ்வின் இறுதிநாள் எனக் கூறி புலம்பி வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் சச்சின் ஓய்வு பெற்றதை தாங்க முடியாத விஜய், தனது வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது. இது குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (செ)

# மீள்குடியேற்ற கூட்டத்திற்கும் எனக்கும் தொடர்பில்லை

## துணைத் தவிசாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு பிரதேச சபையில் நேற்று நடைபெற்ற வலி வடக்கு மீள்குடியேற்றக் குழுவினை மீளமைப்பது தொடர்பான கூட்டத்திற்கும் எனக்கும் எவ்வித தொடர்புமில்லை என வலி வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக்குழுவின் தலைவரும் வலி வடக்கு பிரதேச சபையின் துணைத் தவிசாளருமான எஸ். சஜீவன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக் குழு 2001 வசாவிளான் மகா வித்தியாலய முன்னாள் அதிபர் ஆர். சி. நடராஜாவினால் ஆரம்பிக்கப்பட்டு வலி வடக்கு மக்களின் மீள்குடியேற்ற பிரச்சினை தொடர்பாக பல தரப்புக்களுடன் பேசியும் போராட்டங்கள் நடத்தியும் வந்தன. இதன் பலனாக வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்த பல நிலங்களில் மீள்குடியேற்றம் நடைபெற்றது.

கடந்த நான்கு வருடங்களாக சில இடம் பெயர்ந்த அமைப்புகள் உருவாகி இருந்தன. அன்று தொடக்கம் இன்று வரை எமது அமைப்பு வலி வடக்கு மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக போராடி வருகிறது.

2012ம் ஆண்டு ஆர்.சி. நடராஜா நோய்வாய்ப்பட்ட பின்பு இவ்வமைப்பு என்னிடம் அவரினால் ஒப்படைக்கப்பட்டது. நான் தலைவராக இருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்தது. திடீரென இவ்வமைப்பை சிலர் கையகப்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

எனவே, நேற்று நடைபெற்ற மீள்குடியேற்ற தெரிவு என்ற வலி வடக்கு பிரதேச சபையில் நடைபெறும் தெரிவுக்கும் எங்கள் அமைப்பிற்கும் தொடர்பில்லை. ஆர் சி. நடராஜாவால் ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு தொடர்ந்து என்னுடைய தலைமையில் வலி வடக்கு மக்களின் மீள் குடியேற்றத்திற்காக போராடும் என அவர் மேலுமதெரிவித்தார். (செ-4)

# பொதுநலவாயத்திற்குப் பின்னர் இலங்கைக்கு பாரிய பிரச்சினை

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவரகள் மாநாடு நேற்றுடன் நிறைவடைந்துள்ளது. இந்த நிலையில் இலங்கை அரசாங்கம் இந்த அமர்வின் பின்னர் பாரிய உள்ளூர் மற்றும சர்வதேச சவால்களைச் சந்திக்கவுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திய பிரதமர் மன்மோகன்சிங், கொழும்பு மாநாட்டுக்கு வராத காரணத்தினால் மீண்டும் ஒருமுறை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் இலங்கை, இந்தியாவை தவிர்த்து சீனா மற்றும் பாகிஸ்தானுடன் அதிக உறவை ஏற்படுத்த முனையுமாயின் அது இந்திய - இலங்கை உறவை பாரியளவில பாதிக்கும்.

அதேநேரம் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இலங்கைக்கு விடுத்த எச்சரிக்கை வெறுமனே பிரித்தானியாவால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை என்று எடுத்துக் கொள்ள முடியாது. மாறாக தமது நட்பு நாடான அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடு களின் ஒட்டு மொத்த எச்சரிக்கையாகவே இதனை கருதவேண்டியுள்ளது.

ஏனெனில் கமரூன் இலங்கைக்கு செல்வதற்கு முன்னர் இது தொடர்பில் இந்திய பிரதமருக்கு தெளிவூட்டியமையை சுட்டிக் காட்டலாம்.

இது அரசாங்கத்தை பொறுத்தவரையில் தமது பங்காளிக்கட்சிகள் மற்றும் எதிர்க் கட்சிகளுக்கு மத்தியில் பாரிய பிரச்சினையை உள்ளூரில் ஏற்படுத்தக்கூடும்.

இதற்கு அப்பால் வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், ஆபிரிக்க நாடுகளை இலங்கையின் பக்கம் இழுக்கும் வகையில் மேற்கொண்ட நடவடிக்கை தோல்வி கண்டுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் இலங்கை அண்மைக்காலமாக முதலீடுகளை மேற்கொண்டிருந்தது. எனினும் அந்த ஆபிரிக்க நாடுகள் இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டவில்லை. எனவே ஜி.எல்.பீரிஸின் கணக்கு தப்பாகி விட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (செ-4)





நேற்றுக் கொண்டாடப்பட்ட தமிழர்களின் தீபத் திருநாளாம் கார்த்திகை விளக்கீட்டின் காட்சிகள் சில...

# இன்று ஒரு தகவல்

## ஞானிகள்

ஒருவர் தனியாக ஓரிடத்தில் கண்ணை மூடிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.

அவர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா... தியானம் செய்து கொண்டிருக்கிறாரா... என்பதை எப்படி கண்டு பிடிப்பது?

நமக்குத் தெரிந்த வரையில் தூக்கம் என்றால் தலை அடிக்கடி சாயும். பின் நிமிரும். தியானம் என்றால் ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கும்.

தூக்கத்திற்கும் தியானத்திற்கும் அதிக வித்தியாசம் உண்டு. ஒரு முட்டாள் தூங்கப்போனால் முட்டாளாகவே திரும்பி வருகிறான். அதே முட்டாள் தியானம் செய்தால் ஞானியாகத் திரும்பி வருகிறான்.

அது இருக்கட்டும்... ஞானிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்?

இப்பொழுது நாம் ஒரு அழகான ரோஜாவைப் பூவைப் பார்க்கிறோம். "ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று வியக்கிறோம்.

ஒரு ஞானி அதே ரோஜாவைப் பூவைப் பார்க்கிறார். அவரும் "ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது" என்று நினைக்கிறார்.

உலகப் பொருட்களை நாம் எப்படி ஐம்புலன்கள் மூலமாக உணர்கிறோமோ அப்படித்தான் அவர்களும் உணர்கிறார்கள். அதில் ஒன்றும் வித்தியாசமில்லை.

அல்வா சாப்பிடுகிறோம். அது நமக்கு மட்டும்தான் இனிக்கும். ஞானிகளுக்கெல்லாம் கசக்கும் என்றா சொல்வோம்? அப்படியில்லை. அவர்களுக்கும் அதே நிலமைதான்.

அப்படியானால் ஞானிகளுக்கும் நமக்கும் என்னதான் வித்தியாசம்? அந்த வேறுபாடு எந்தக்கட்டத்தில் ஆரம்பமாகிறது? அதை இப்பொழுது பார்ப்போம்.

இப்பொழுது மறுபடியும் அந்த ரோஜாப்பூவின் பக்கம் போவோம். ஞானி அதைப் பார்க்கிறார்.

ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது! என்று நினைக்கிறார். அதன் பின் அதையே நினைப்பதில்லை. வேறு வேலை பார்க்கப் போய் விடுவார். அல்லது இயற்கையின் ஆற்றலைப்பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார். அவ்வளவுதான்! ஆனால் நாம் அப்படிச் செய்யமாட்டோம்.

நாம் என்ன செய்வோம் தெரியுமா? முதலில் அந்த ரோஜாப் பூவைப் பார்ப்போம்.

ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது என்று நினைப்போம். அந்த அழகை ரசிப்போம். அதன்பின் அந்த மலர் நமக்கு வேண்டும் என்று நினைப்போம்.

அதற்கு அடுத்த கட்டம்... அந்த மலர் இல்லையென்றால் நம்மால் வாழ முடியாது என்ற நிலைமைக்கு வந்து விடுவோம்! உடனே அந்த மலரை அடைவதற்கு முயற்சி செய்வோம்!

அதற்கு யாராவது தடையாக இருந்தால் அவர்கள் மேல் நமக்குக் கோபம் வரும். அந்தக் கோபத்தின் காரணமாக நமது விவேக புத்தியை இழப்போம்! யாரிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை மறந்து விடுவோம்.

அதன் காரணமாக ஞாபகமறதி ஏற்படும். அதாவது முன்பு விவேக புத்தி மழுங்கியிருந்தால் அது இப்போழுது அடியோடு இல்லை என்ற நிலை ஏற்படும்.

அதன் காரணமாக நம் புத்தியை இழப்போம். கடைசியில் அழிவோம். இந்த நிலைமை நமக்கு வந்துவிடக் கூடாது என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?

நமக்கு கெடுதல் செய்யக்கூடிய ஆசைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும். ஒரு விடயம் தெரியுமா? எந்த ஆசைக்குமே முதலில் வலு கிடையாது.

அதைப்பற்றி நாம் நினைக்க நினைக்கத்தான் அதற்கு வலு உண்டாகிறது. இளம் தளிராக இருந்தது இப்பொழுது பெரிய மரமாகி விடுகிறது.

ஞானிகள் இந்தளவுக்கு அதை வளர விடுவதில்லை. அது தான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

ஒரு இளைஞன் கையில் தடியொன்றை வைத்துக் கொண்டு நடந்து போய்க்கொண்டிருந்தான். அதே நேரம் வயதான ஒருவரும் ஒரு தடியை வைத்துக் கொண்டு நடந்து போகிறார். அது அவருக்கு ஊன்றுகோல். அது இல்லையெனில் அவரால் நடக்க முடியாது. அது தவறி கீழே விழுந்தால் அவரும் விழுந்து விடுவார்.

ஆனால், அந்த இளைஞன் அப்படியல்ல. அவனுடைய கைத்தடியை யாராவது எடுத்துக் கொண்டுபோனால் கூட அவன் கவலைப்படமாட்டான். அவன் அந்தக் கைத்தடியைப் பயன்படுத்துவதுபோல்தான் ஞானிகள் உலகப் பொருட்களைப் பயன்படுத்துவார்கள்.

ஆனால், நம்மைப் போன்றவர்கள் அந்த வயதானவர் கைத்தடியை பயன்படுத்துவது போல் உலகப் பொருட்களைப் பயன்படுத்துகிறோம். இதுதான் ஞானிகளுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம்.

ஞானி என்பவர் பொருட்களைத் துறக்கமாட்டார். அதன் மீதுள்ள பற்றுதலைத்தான் துறப்பார். எனக்குத் தெரிந்த ஞானி ஒருவர் இருந்தார். அவர் சொன்னார்.

"1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதியை என்னால் மறக்க முடியாது" என்றார்.

"ஏன்" என்று கேட்டேன்.

"அதுதான் எனக்கு ஞானம் வந்த நாள்" என்றார்.

"அப்படியா?" என்றேன்.

"ஆமாம், அன்று தான் எனக்கு திருமணமானது என் மனைவி பெயர் ஞானம்!" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

---

### இலங்கையின் மனித உரிமை நடவடிக்கைகள் திருப்தி

# கமலேஷ் சர்மாவின் கருத்துக்கு கனடா கடும் கண்டனம் வெளியீடு

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மாவின் கருத்துக்கு கனடா கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க இலங்கை உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கமலேஷ் சர்மா அண்மையில் தெரிவித்திருந்தார்.

சர்மாவின் இலங்கை குறித்த கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என கனடா அதிருப்தி வெளியிட்டுள்ளது. இலங்கையின் மனித உரிமை விவகாரம் தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் போதுமானவையல்ல எனவும் கனடா தெரிவித்துள்ளது.

வடக்கில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருவதாக கனேடிய வெளிவிவகார அமைச்சின் மனித உரிமை விவகாரச் செயலாளர் தீபக் ஒபராய் தெரிவித்துள்ளார்.

சட்டம் ஒழுங்கு, ஜனநாயகம், நல்லாட்சி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என சுட்டிக் காட்டிய அவர் பொதுநலவாய நாடுகள் அமைப்பு கடமை தவறிச் செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகளின கொள்கைகள், கோட்பாடுகள் அந்நாடுகளில் பின்பற்றப்படுகின்றனவா இல்லையா என்பதனை அமைப்பு உன்னிப்பாக கவனித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமை மீறல் மற்றும் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக பொதுநலவாய நாடுகள் அமைப்பு கடுமையான தீர்மானத்தை எடுக்க வேண்டுமெனவும் கனடா புலிகளுக்கு ஆதரவாக இலங்கை அரசாங்கம் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-2)

# பொதுநலவாய நாடுகளின் மாநாடு 2015 இல் மால்டாவில் நடைபெறும்

## அரச தலைவர்கள் ஏகமனதாக முடிவு

எதிர்வரும் 2015 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை மால்டா நாட்டில் நடத்துவது என பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் நேற்று காலை ஏகமனதாக தீர்மானித்தனர்.

இது எதிர்பார்க்கப்படாத முடிவு என கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள மால்டா நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜோசப் மஸ்கட் தெரிவித்தார்.

2015 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்துவதில் இருந்து மொரீசியஸ் விலகி கொண்டதை அடுத்தே மாலடாவுக்கு இம்மாநாட்டை நடத்தும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய நாடான மால்டா ஏற்கனவே கடந்த 2005 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தியுள்ளது.

மால்டாவுக்கு பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்த மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்திருப்பதானது, அந்த அமைப்பின் நாடுகள் மற்றும் சர்வதேச நாடுகள் மத்தியில் மால்டா தனது மரியாதையைப் பலப்படுத்த கிடைத்துள்ள முக்கியமான சந்தர்ப்பம் என ஜோசப் மஸ்கட் குறிப்பிட்டார்.

2015 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை மொரீசியஸில் நடத்தவே அந்த அமைப்பு முன்னர் தீர்மானித்திருந்தது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் பிரச்சினைகளைக் காரணம் காட்டி அந்த நாடு கொழும்பு மாநாட்டை புறக்கணித்ததுடன் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்துவதில் இருந்தும் விலகிக் கொண்டது. (செ-11)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 90 | 100 |
| தக்காளி | 60 | 40 | 60 | 80 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 | 40 | 40 |
| கோவா | 25 | 20 | 60 | 60 |
| கரட் | 40 | 40 | 80 | 80 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 30 | 60 | 40 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 220 | 220 | 230 | 240 |
| பெரிய வெங்காயம் | 240 | 180 | 200 | 240 |
| பாகற்காய் | 80 | 70 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 30 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 60 | 60 |
| பயற்றங்காய் | 80 | 70 | 70 | 80 |
| லீக்ஸ் | 70 | 70 | 90 | 100 |
| பீற்றூட் | 20 | 20 | 30 | 40 |
| கறிமிளகாய் | 90 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 60 | 150 | 60 |
| போஞ்சி | 110 | 80 | 150 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 60 | 20 |
| தேசிக்காய் | 180-200 | 150 | 210 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50 | 35-45 |

# இராசி பலன்

18.11.2013
(கார்த்திகை 02, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
பிரதமை முன்னிரவு 9.57 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 1.57 மணிவரை
இராகுகாலம் 7.38-9.08 மணிவரை
சுபநேரம் 12.08-1.38 மணிவரை
முதலாம் கார்த்திகை சோமவாரம்,
விநாயகர் விரதாரம்பம், விஷ்ணுவாலய தீபம்

**மேடம்** காலையிலேயே சுப தகவல்கள் வந்து சேரலாம், யோகமான நாள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், உங்கள் வார்த்தைகளை பலரும் கேட்டு நடக்க முன்வருவர்.

**இடபம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பணம் பற்றிய கவலைகள் தீரும், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மிதுனம்** எடுத்த செயலை முடிக்க ஒருமுறைக்கு பலமுறை அலைய நேரிடலாம், தாராளமாக செலவு செய்து மகிழ்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சஞ்சலங்கள் கூடும்.

**கடகம்** வருமானம் அதிகரிக்கும் நாள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாக செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான அறிகுறியுண்டு.

**சிங்கம்** சந்தோசமான சம்பவங்கள் நடைபெறும் நாள், தொழிலில் புதியவர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**கன்னி** ஆன்றோர் சந்திப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியத்தில் கவனமெடுக்க வேண்டிய நாள்.

**துலாம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மறதியால் சில வேலைகளை செய்யாமல் விட்டு விடுவீர்கள், வேலைச்சுமை அதிகரிக்கும், செலவுகளுக்கு போதிய பணம் கிடைக்கலாம்.

**விருச்சிகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம், வருமானம் திருப்தி தரும், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**தனுசு** கடன்சுமை குறைந்து கவலைகள் குறையும் நாள், புகழ்மிக்கவர்களின் மதிப்பு கிடைக்கும், உடல் நலன் சீராகும், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், செய்தொழில் மேன்மையுண்டு.

**மகரம்** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வீர்கள்.

**கும்பம்** தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு, இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**மீனம்** பகை விலகி பாசம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம்.

வளவன்

# ஜனசக்தி நிறுவனத்துக்கு புதிய சிஈஓ



ஜனசக்தி பிஎல்சி நிறுவனத்தின் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக சிரேஷ்ட நிபுணர் ஜூட் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனசக்தி அறிவித்துள்ளது.

இந்த புதிய பதவியேற்புடன் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு ஜூட் தலைமை தாங்கவுள்ளதுடன், நிறுவனத்தின் எதிர்கால இலக்குகளை வெற்றி கொள்வதற்கு ஏற்ப நிறுவனத்தை திறம்பட செயற்படுத்த திட்டமிட்டுள்ளார்.

ஜனசக்தியின் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரியாக இவர் பதவியேற்பதற்கு முன்னர், கெல்சி ஹோம்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், கார்கீல்ஸ் மனுபக்டரிங் பிராண்ட்ஸ் இல் விற்பனை மற்றும் விநியோகப் பிரிவின் பிரதம பணிப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

தொழில் ரீதியில் ஒரு கணக்காளரான ஜூட் பெர்னாண்டோ, தனது 22 வருட தொழில் வாழ்க்கையில் நிதி, முகாமைத்துவ விநியோக வலையமைப்பு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் சர்வதேச சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் பல்வேறு உயர் பதவிகளை வகித்துள்ளார்.

கொத்மலை ஹோல்டிங்ஸ் நிறுவனத்தில் பணிப்பாளராகவும், பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணிபுரிந்த காலத்தில் பல்வேறு பிரிவுகளின் உற்பத்தித் திறன் மற்றும் செயற்திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் மிக முக்கிய பங்காற்றியுள்ளார். அதற்கு முன்னதாக, ஹேமாஸ் குழும நிர்வாகக் குழுவின் அங்கத்தவராகவும், ஹேமாஸ் மனுபக்டரிங் நிறுவனத்தின் பணிப்பாளர் எனும் ரீதியில், முகாமைத்துவ விநியோக வலையமைப்பின் பிரதான பொறுப்பாளராகவும் இவர் செயற்பட்டுள்ளார்.

மேலும் டன்னமிஸ் கெபிடெல் பிஎல்சி, கெல்சி ஹோம்ஸ் மற்றும் First Capital ஹோல்டிங் பிஎல்சி ஆகிய பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் சபையிலும் இவர் செயலாற்றியுள்ளரர்.

# இரு விருதுகளை தனதாக்கியது 99 எக்ஸ் ரெக்னோலஜி



இலங்கையின் வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப துறையில் தனக்கென தனித்துவத்தை உருவாக்கி வரும் மென்பொருள் பொறியியல் வடிவமைப்பு துறையில் முன்னோடியாக திகழும் 99X Technology அண்மையில் இடம்பெற்ற தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தேசிய தரச்சிறப்புகள் விருதுகள் 2013இல் இரு விருதுகளை தனதாக்கியிருந்தது.

R&D பிரிவில் "WAG – Web Accessibility Guide' வெண்கல விருதும், Tools மற்றும் Infrastructure Applications பிரிவில் "ALMUR" app சிறப்பு விருதையும் வென்றிருந்தது.

இந்த விருதுகள் குறித்து நிறுவனத்தின் இணை தாபகரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மனோ சேகரம் கருத்து தெரிவிக்கையில், "ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி என்பது தொடர்ச்சியாக புத்தாக்கங்களை ஏற்படுத்துவது எனும் எமது கொள்கைக்கு அடிப்படையான விடயமாக அமைந்துள்ளது. இந்த இலக்கை எய்துவது தொடர்பாக நாம் வெளிப்படுத்தி வரும் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கு சான்றாக இந்த விருது அமைந்துள்ளது" என்றார்.

# எக்ஸ்போ லங்காவுக்கு தங்க விருது




அமெரிக்க தொழில்சார் தொடர்பாடல்கள் சங்கத்தின் சர்வதேச தொடர்பாடல்கள் போட்டியின் கவன ஈர்ப்பு விருதுகள் நிகழ்வில் Expolanka Holdings PLC நிறுவனத்தின் "TAGGED" 2012/2013 ஆண்டறிக்கைக்கு தங்க விருது கிடைக்கப் பெற்றுள்ளது.

பல்வேறு தொழிற்துறைகள் மற்றும் வேறுபட்ட அளவுகளின் கீழான நிறுவனங்கள் மத்தியிலிருந்து இந்த சர்வதேச தொடர்பாடல்கள் போட்டிக்கு இதன் வரலாற்றிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான நுழைவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக 12 நாடுகளைச் சார்ந்த 300 நிறுவனங்களின் மத்தியிலிருந்து கிட்டத்தட்ட 1,500 நுழைவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை மிகக் கடுமையான போட்டிக்கு வழிகோலியிருந்தது.

இவ்விருது கிடைக்கப்பெற்றமை தொடர்பில் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல், வர்த்தகத் தொடர்பாடல்கள் மற்றும் வர்த்தக சமூக நலன்புரித் தொழிற்பாடுகளுக்கான தலைமை அதிகாரியான படி வீரசேகர கருத்துத்தெரிவிக்கையில்,

"பெருமதிப்புமிக்க இந்த சர்வதேச விருதை வென்றமை மற்றும் உலகளாவில் ஆண்டறிக்கைகள் மத்தியில் 36ஆவது ஸ்தானத்தைப் பெற்று மிகச் சிறந்த 100 ஆண்டறிக்கைகள் பட்டியலில் இடம்பிடித்துள்ளமை ஆகியவற்றையிட்டு நாம் மிகவும் பெருமிதம் அடைந்துள்ளோம்.

இலங்கையிலும் உலகின் வேறு எந்தப் பகுதியிலும் Expo நிறுவனம் முன்னெடுத்து வருகின்ற வர்த்தகச் செயற்பாடுகளின் தரம் மற் றும் சிறப்பிற்கான உத்தரவாதத்தை உறுதிசெய்யும் வகையில் ஆண்டறிக்கையின் கருத்தாக்கம் வடிவமைக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

# கடன் அறிக்கை இணையத்தில்

கடன் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கைகளை இணையத்தளத்தில் வெளியிட இலங்கை கொடுகடன் தகவல்கள் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இணையத்தளத்தின் ஊடாக கடன் அறிக்கையை பார்வையிடுவதற்கு முன்கூட்டியே தம்மை பதிவு செய்துக்கொள்ள வேண்டும் என பணியகத்தின் பணிப்பாளர் காமினி கருணாரத்ன தெரிவித்தார்.

வழமையான முறையின் ஊடாக தபால் மூலம் கடன் தொடர்பான அறிக்கையொன்றை பெற்றுக கொள்ள 10 நாட்கள் தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறையை பயன்படுத்துவதன் மூலம் உடனடியாக இணையத்தளங்களில் கடன் தொடர்பான அறிக்கைகளை பார்வையிடுவதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது

# டொபாக்கோவிடமிருந்து அரசாங்கத்துக்கு ரூ.48.5 பில். வருமானம்

நடப்பு ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இலங்கை புகையிலை கம்பனியிடமிருந்து (சிலோன் டொபாக்கோ கம்பனி) 48.5 பில்லியன் ரூபாய் இலங்கை அரசாங்கத்துக்கு வருமானமாக கிடைத்துள்ளதாக கம்பனி அறிவித்துள்ளது.

இந்த பெறுமதி கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 700 மில்லியன் ரூபா அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த காலப்பகுதியில் மொத்த புகையிலை தயாரிப்புகளின் விற்பனை 11 வீத சரிவைப் பதிவு செய்திருந்த போதிலும், இந்த வருமான அதிகரிப்பு பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கம்பனியின் வரிக்குப் பின்னரான இலாபம் 6.6 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. சாதாரண தயாரிப்புகளின் விற்பனையில் சரிவு ஏற்பட்டிருந்த போதிலும், உயர் ரக தயாரிப்பான டன்ஹில் விற்பனை அதிகரித்திருந்ததாக கம்பனி அறிவித்துள்ளது.

# வீட்டுக்கு வீடு பிரசாரம் மூலம் சேமிப்பை ஊக்குவித்தது செலான்



செலான் வங்கியானது கடந்த 09ம் திகதி சனிக்கிழமை பிரமாண்டமான வீட்டுக்கு-வீடு பிரசாரத் திட்டத்தை முன்னெடுத்தது.

நாடு முழுவதிலும் அமைந்துள்ள செலான் வங்கியின் 150 கிளைகளைச் சேர்ந்த 3000 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் இப் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், இலங்கையின் பெரும்ள விலான பொது மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை தனிப்பட்ட முறையில் ஊக்குவித்தனர்.

இந்த ஊக்குவிப்பு பிரசாரத்தின் போது செலான் வங்கியின் ஏனைய ஊழியர்களுடன் இணைந்து முகாமைத்துவ உயரதிகாரிகளும் வீதிகளில் இறங்கி பல்லாயிரக் கணக்கான பொது மக்களுடன் உரையாடியதையும் அதேபோல் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நிச்சயமற்ற தன்மைகளை கருத்திற் கொண்டும் எதிர்கால சுபீட்சத்திற்காகவும் விவேகமுள்ள சேமிப்பை கடைப்பிடிக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து அவர்களுக்கு கவனமாக தெளிவுபடுத்தியதையும் காணக்கூடியதாக இருந்தது.

# இணையப் பாவனையில் இரண்டாமிடம் பிடித்தது இந்தியா

அடுத்த 8 மாதங்களில், இந்தியாவில் இணையதளத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை 18.53 சதவீதம் வளர்ச்சி கண்டு 24.30 கோடியை எட்டும்.

இதையடுத்து, அமெரிக்காவை பின்னுக்கு தள்ளி இந்தியா 2-ம் இடத்தைப் பிடிக்கும் என இந்திய இணையதள மற்றும் மொபைல் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் சீனாவில் இணையதளத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 30 கோடிக்கும் அதிகமாக உள்ளது.

இதையடுத்து அந்நாடு முதலிடத்தைப் பிடித்துள்ளது. அமெரிக்கா 20.70 கோடி இணையதள வாடிக்கையாளருடன் இரண்டாம் இடத்தில் உள்ளது.

நடப்பாண்டு ஒக்டோபர் வரையிலுமாக இந்தியாவில் இணையதளம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 20.5 கோடியாக உள்ளது. இதன் வளர்ச்சி ஆண்டுக்கு 40 சதவீதம் என்ற அளவில் உள்ளது. இதையடுத்து நடப்பாண்டு இறுதிக்குள் இணையதளம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 21.30 கோடியை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இணையதளத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை 1 கோடியிலிருந்து 10 கோடியை எட்டுவதற்கு பத்து ஆண்டுகளுக்கும் மேல் ஆகியுள்ளது.

ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில், இந்த எண்ணிக்கை மளமளவென அதிகரித்து 10 கோடியில் இருந்து 20 கோடியை எட்டிப் பிடித்துள்ளது.

இதற்கு மொபைல் போன்கள் மூலமாக இணையதளத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டதே முக்கிய காரணமாகும்.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,855.34 | 5,810.97 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3232.50 | 3174.68 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 2,247.705

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** எஸ்.எம்.பி லீசிங்(X) (0.40), சம்சன் இன்ரனற் (102.00), திறி ஏக். பாம்(36.00), ஆஸிரி சென்ரல்(290.00), எஸ்.எம்.பி லீசிங்(0.80).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** லங்கா சென்சரி(W)(0.40), மஸ்கெலிய (10.30), லங்கா சென்சரி(W)(1.20), மடுல்சிமா( 11.20), மிரமர்(45.80).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.47 | 132.73 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 207.36 | 213.91 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 173.12 | 179.36 |
| சுவிஸ் பிராங் | 140.18 | 145.72 |
| கனேடிய டொலர் | 122.98 | 127.54 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.98 | 124.87 |
| சிங்கப்பூர் டொலர் | 103.31 | 107.01 |
| ஜப்பான் யென் | 1.28 | 1.33 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.07 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.69 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க நல்லிணக்க ஆணைக்குழு அவசியம்

## இலங்கைக்கு தென்னாபிரிக்கா பரிந்துரை

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான கரிசனைக்குரிய விவகாரங்களுக்கு பதிலளிக்கும் வகையில் உண்மையைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது குறித்து இலங்கை அரசாங்கத்துக்கு தென்னாபிரிக்கா பரிந்துரைத்துள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கச் சென்ற தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா கடந்த வெள்ளிக்கிழமை மகிந்த ராஜபக்சவைச் சந்தித்த போதே, இப்பரிந்துரையை முன்வைத்துள்ளார்.

இத்திட்டம் தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் பல மாதங்களாக பேச்சு நடத்தியிருந்த நிலையிலேயே, கொழும்பிலுள்ள தென்னாபிரிக்கத் தூதுவர் ஜொவ் டொட்ஜ் தலைமையிலான குழுவினர் தென்னாபிரிக்க ஜனாதிபதி இத்திட்டம் தொடர்பில் இலங்கை ஜனாதிபதியுடன் கலந்துரையாடியுள்ளார்.

இத்திட்டம் தொடர்பில் இலங்கை ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காகவே தென்னாபிரிக்க ஜனாதிபதி பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், உண்மையைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடனும் தென்னாபிரிக்க ஜனாதிபதி கலந்துரையாடுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இலங்கை அரசாங்கம் இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டால், உண்மையைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பில் மேலதிக நகர்வுகள் மேற்கொள்ளப்படலாம் என கருதப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மீதான தீர்மானங்களில் வலியுறுத்தப்பட்டுள்ள பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவும் வகையில் இத்திட்டம் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனீவாவில் அடுத்த வருடம் மார்ச் மாதம இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இல ங்கை மீது மேற்கத்தேய நாடுகள் மேலும் அழுத்தங்களைக் பிரயோகிக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், தென்னாபிரிக்காவால் இத்திட்டம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. (செ-2)

## மனவளக்கலை யோகாசனப் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

தமிழகத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருக்கும் மனவளக்கலை முதுநிலை பேராசிரியர் ஆர்.ஜெயபாலினால் மனவளக்கலை யோகாசன பயிற்சிகள் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். நாச்சிமார் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

எனவே ஆர்வமுள்ள அனைவரையும் இப்பயிற்சி வகுப்பில் பங்கேற்று பயன் பெறுமாறு இலங்கை மனவளக்கலை மன்ற வண்ணார்பண்ணை தவமையம் கேட்டுக் கொண்டுள்ளது. (செ-2)

## மத்திய அரசின் தவறான கொள்கை; நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி

### நரேந்திர மோடி தெரிவிப்பு

மக்களுடன் தொடர்புடைய ஒரே கட்சி பாரதீய ஜனதா மட்டுமே என நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க.பிரதமர் வேட்பாளரும், குஜராத் மாநில முதல்வருமான நரேந்திர மோடி நேற்று பெங்களூரில் அரண்மனை மைதானத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.


அதன் போது அவர் கூறியதாவது,

தகவல் தொழில்நுட்பத்துறைக்காகவே தனியாக ஒரு அமைச்சை பிரதமர் வாஜ்பாய் ஏற்படுத்தினார்.

இதனால் தான் பெங்களூர் இந்த அளவுக்கு வளர முடிந்தது. அதேபோன்று சந்திரனும் விண்கலத்தை அனுப்பும் திட்டத்தை முதன்முதலில் உருவாக்கியதும் வாஜ்பாய் அரசுதான்.ஜனநாயகத்தைக்குழி தோண்டிப் புதைக்கும் வகையில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு தற்போது நடந்து கொள்கிறது. அதுதான் காங்கிரஸ் வழியான ஜனநாயகப் பாதை போலும்.காங்கிரஸ் கட்சிக்கு ஒருபோதும் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இருந்ததில்லை.

சி.பி.ஐயை காங்கிரஸார் தங்களது பழிவாங்கும் ஆயுதமாக பயன்படுத்துகிறார்கள். மத்திய அரசின் தவறான கொள்கையால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. மக்களுடன் தொடர்புடைய ஒரே கட்சி பா.ஜ.க. மட்டுமே என கூறினார். மேலும் அவர் பாரத ரத்னா விருது பெற்றுள்ள சச்சின் டெண்டுகல்கர், சி.என்.ஆர். ராவ் ஆகியோருக்கு பாராட்டுக்களையும் தெரிவித்தார். (2)

## திருவண்ணாமலை பரணி தீபம் நேற்று அதிகாலை ஏற்றப்பட்டது



(திருவண்ணாமலை)

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் நேற்று அதிகாலை பரணி தீபம் ஏற்றப்பட்டது. அத்துடன்மாலை 6 மணிக்கு மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது.

அக்னி ஸ்தலமாக விளங்கும் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் கார்த்திகை தீபத் திருவிழா கடந்த 8ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகின்றது.

விழாவின் உச்சக்கட்டமான தீபத் திருவிழா நேற்று நடைபெற்றது. இதையொட்டி அதிகாலை 2 மணியளவில் அண்ணாமலையார் கோயில் மடை திறக்கப்பட்டது. அண்ணாமலையார், உண்ணாமலையம்மனுக்கு மஞ்சள், சந்தனம், பஞ்சாமிர்தம், பால், தயிர், இளநீர் ஆகியவற்றால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து அண்ணாமலையாருக்கு வைரக் கிரீடமும, தங்க கவசமும், உண்ணாமலையம்மனுக்கு தங்க கவசமும் அணிவித்து சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது.

அண்ணாமல்லையார் கோயிலில் நேற்று அதிகாலை 4 மணிக்கு பரணி தீபம் ஏற்றப்பட்டது. அன்று மாலை 6 மணிக்கு கோயிலின் பின்புறமுள்ள உயரமலையில் மகாதீபம் ஏற்றப்பட்டது.

சுமார் 20 இலட்சம் பக்தர்கள் கலந்து கொண்டனர். இங்குள்ள அனைத்து விடுதிகள், சத்திரங்கள், திருமண மண்டபங்கள், ஆசிரமங்களில் பக்தர்கள் கூட்டம் நிரம்பியது. ஏராளமான பக்தர்கள் கிரிவலம் வந்த வண்ணம் உள்ளனர். நகரில் ஆங்காங்கே பல்வேறு ஆன்மீக அமைப்புகள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானமாகும வழங்கப்பட்டது. (செ-2)

## நாவலர் விழா

### யாழ்.தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுப்பு

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினரால் முன்னெடுக்கப்படவுள்ள நாவலர் விழா எதிர் வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.தமிழ்ச் சங்கத்தின் உப தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், கனகசபை அருள்நேசன் தம்பதியர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

தொடர்ந்து, கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் திருமதி விஜயதர்சினி தயாளனின் தெய்வ வணக்கம் இடம்பெறவுள்ளது. வரவேற்புரையை தமிழ்ச் சங்கப் பொருளாளர் ச.லலீசனும் தொடக்கவுரையை தமிழ்ச் சங்கத் தலைவர் தி.வேல்நம்பியும் ஆற்றவுள்ளனர்.

நாவலரும் தமிழ்த்தேசியமும் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு சிறப்புரையும் யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.ஸ்ரீதர்ஷனின் நாவலர் இசையரங்கும் இடம்பெறவுள்ளது.

நாலரின் கனவை நனவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பது அவரது சமயப் பணிகளா? அல்லது தமிழ்ப்பணிகளா? என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் பட்டிமண்டபம் இடம்பெறும். இதில் யாழ். பல்கலைக்கழக் விரிவுரையாளர்களான தி.செல்வமனோகரன், சி.ரமணன், ஆசிரியர் கு.பாலஷண்முகன், மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் பங்கேற்கவுள்ளனர்.

(செ-9-23-254)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து (V) நட்சத்திரம்: மகம் 4 கி.பா : 61, 2 இல் செவ் உயரம்: 5'2" தகைமை/தொழில்: BS.C / பட்டதாரி ஆசிரியர் தொ.இ: B/2544 | பிறப்பு: 1982 இந்து (V) நட்சத்திரம்: பூரம் 4 கி.பா : 34 உயரம்: 5'7" தகைமை/தொழில்: MSC (UK) / UK (Student Visa) எதிர்பார்ப்பு: PR உள்ள பெண் தொ.இ: B/2554 |
| பிறப்பு: 1981 இந்து (Vis) நட்சத்திரம்: கார்த்திகை 4 கி.பா : 58 உயரம்: 161cm தகைமை/தொழில்: B.Sc, RN, DGN, DPN, OTN / சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் தொ.இ: B/2546 | பிறப்பு: 1987 இந்து (V) நட்சத்திரம்: கார்த்திகை 4 கி.பா : 31 , 4 இல் சூரி.செவ் உயரம்: 165cm தகைமை/தொழில்: A/L / ஆசிரியர் தொ.இ: B/2556 |
| பிறப்பு: 1985 இந்து (V) நட்சத்திரம்: அனுசம் 2 கி.பா :39 உயரம்: 5'3" தகைமை/தொழில்: A/L / வியாபார உரிமையாளர் தொ.இ: B/2548 | பிறப்பு: 1983 இந்து (V) நட்சத்திரம்: மிருகசீரிடம் 1 கி.பா : 71 உயரம்: 5'5" தகைமை/தொழில்: A/L / கம்பனி பொறுப்பாளர் தொ.இ: B/2557 |
| பிறப்பு: 1982 இந்து (V) நட்சத்திரம்: விசாகம் 4 கி.பா : 32.5 உயரம்: 6" தகைமை/தொழில்: A/L, தொழிற் பயிற்சி (மின்) / தற்போது கட்டாரில் தொ.இ: B/2553 | பிறப்பு: 1984 இந்து (Vis) நட்சத்திரம்: திருவாதிரை 2 கி.பா : 11.25 உயரம்: 5'4" தகைமை/தொழில்: QS Engineer / (Germany) தொ.இ: B/2558 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கு புலனாய்வாளர்களால் அச்சுறுத்தல்

வடமாகாண சபைத் தேர்தலின் பின் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மீது அரசின் புலனாய்வாளர்களாலும் இனந்தெரியாத நபர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வரும் அடக்கு முறைகளின் தொடர்ச்சியாக யாழ்.ஊர்காவற்றுறை தொகுதி தம்பாட்டி பிரதேச மக்கள் பொலிஸாராலும் புலனாய்வாளர்களாலும் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸாருடன் சேர்ந்தியங்கும் சிலரின் உதவியுடன் மேற்படி பிரதேசத்தின் சுவர் ஒன்றில் "புலிகள் மீண்டும் வருவார்கள்" என கரியால் எழுதப்பட்டு பின்னர் அப்பகுதிக்கு வருகை தந்த பொலிஸாரும் புலனாய்வாளர்களும் அவ் வாசகத்தை அப் பகுதி மக்களே எழுதியதாக அச்சுறுத்தியுள்ளனர்.

ஆறு பேர் கொண்ட பட்டியல் ஒன்றை தம்வசம் வைத்திருந்த பொலிஸார் அவர்களை இது தொடர்பாக தாம் தேடி வருவதாக கூறியுள்ளனர். அப்பட்டியலில் உள்ள அனைவரும் கடந்த மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் வெற்றிக்காக செயற்பட்டவர்கள் என மக்கள் தெரிவித்தனர்.

இவ் விடயம் தொடர்பாக அப்பகுதி மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபனுக்கு தெரிவித்ததையடுத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் அப்பகுதிக்கு நேரில் சென்ற மாகாண சபை உறுப்பினர் மக்களுடன் கலந்துரையாடி இப்பிரச்சினையை உரியவர்களிடம் தான் எடுத்துச் சென்று தீர்வு காண முயற்சிப்பதாக உறுதியளித்தார்.

அத்துடன் அப்பகுதியில் நிலவும் குடி தண்ணீர் பிரச்சினை பற்றியும் மக்கள் மாகாண சபை உறுப்பினரிடம் தெரிவித்தனர். இது தொடர்பிலும் உரியவர்களிடம் தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்வதாக அவர் தெரிவித்தார்.

இதன் போது, மாகாண சபை உறுப்பினருடன் இலங்கைத்தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட இளைஞர் அணிச் செயலாளர் ப.தர்சானந்தும் உடன் சென்றிருந்தார். (செ-6)






## க.பொ.த.சாதாரணதர மாணவர்களுக்கு

(மானிப்பாய்)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை தயார்படுத்தும நோக்கோடு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தொடர் இலவசக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.


இதன்படி,3ஆவது கருத்தரங்குகள் இன்றும் நாளையும் ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை இளைஞர் கழகத் தலைவர் சுதர்ஷனி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தராஜா, சிறப்பு விருந்தினராக கிருபாலேணர்ஸ் முகாமையாளர் ஏ.கிருபாகரன், கௌரவ விருந்தினர்களாக ஆனைக் கோட்டை றோ.க.த.க பாடசாலை அதிபர் திருமதி என். சந்திரகுமார், உடுவில் பிரதேச இளைஞர் சேவை அதிகாரி அனுஷன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கருத்தரங்கில் இன்று திங்கட்கிழமை கணித பாடமும் நாளை செவ்வாய்க்கிழமை விஞ்ஞான பாடமும் நடைபெறவுள்ளது. (செ-9-23)

# வெடியரசன் கோட்டைப் பகுதியில் பௌத்த விகாரை அமைக்க முயற்சி



(யாழ்ப்பாணம்)

வரலாற்றை திரிவுபடுத்தி மதத்தை பரப்பும் நோக்கில் நெடுந்தீவு முதலாம் வட்டாரத்திலுள்ள வெடியரசன் கோட்டையின் இடிந்து போன பகுதியில் பௌத்த விகாரை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதோடு சிறிய புத்தர் சிலையும் அங்கு வைக்கப்பட்டுள்ளது.

இதனைவிட அப்பகுதியில் கடந்த காலத்தில் புத்தரின் பெரிய சிலையொன்று இருந்ததாகவும் பௌத்த விகாரை அமைக்கப்பட்டிருந்ததாகவும் சுற்றுலாப் பயணிகளிடம் பொய்யான கருத்துக்கள் பரப்பப்படுவதாகவும் அப் பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அத்தோடு இந்தப் பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்த வடக்கு மாகாண விவசாயம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடமும் மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்திடமும் இது தொடர்பில் அப் பகுதி மக்கள் முறையிட்டுமுள்ளனர்.

கோட்டையின் இடிந்து போன பகுதியில் சிறிய புத்தர் சிலையை சுற்றுலாவுக்கென வருகை தந்த துறவி ஒருவர் வைத்து விட்டு சென்றதாகவும் இதற்கு பின்னர், அங்கு வந்த பொலிஸார் சிலையை அகற்றினால் விளைவுகள் மோசமாக இருக்கும் எனவும் எச்சரித்ததாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரிடம் தெரிவித்தனர்.

இதனைவிட அப்பகுதியில் பௌத்த விகாரைகளை அமைத்து அப் பகுதியை சிங்களவர்கள் பூர்வீகமாக வாழ்ந்த பிரதேசமாக மாற்றவும் வெடியரசன் கோட்டையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இருவரும் தமது கண்டனத்தை வெளியிட்டதோடு தமிழரின் வரலாற்று வாழ்விடங்களை சிங்கள மயமாக்க பல நடவடிக்கைகளை அரசு தமிழர் தாயகப் பிரதேசங்களில் முன்னெடுத்து வருவதாகவும் வரலாற்றை திரிவுபடுத்தும் நோக்கில் இந்த புத்தர்சிலை வைக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர். (செ-6)

# காணியற்றோருக்கு காணி வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமது சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து காணிகள் இல்லாதிருப்பவர்களுக்கு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் காணிகள் வழங்கப்படுவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்கில் மீள்குடியேற்றவென பதிவு செய்யப்பட்டுள்ள 5 ஆயிரத்து 863 குடும்பங்களில் ஆயிரத்து 129 குடும்பங்கள் நலன் புரி முகாம்களில் வசித்து வருகின்றனர்.

இடம்பெயர்ந்த காலத்தில் ஒரே குடும்பங்களாக இருந்தவர்கள் தற்போது தனித்தனி குடும்பங்களாக மாறியிருக்கின்றனர்.

இவர்களும் தங்களுக்குகாணிகள்வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். ஆனால் இவர்களில் ஒருவருக்கு உரித்துடைய காணி மட்டுமே வலி. வடக்கில் இருக்கின்றது.

அத்துடன் வலி.வடக்கில் காணி வைத்திருப்பவர்கள் இன்னொருவருக்கு தமது காணியை கொடுக்கவும் முன்வரமாட்டார்கள்.

இதனால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற அடிப்படையிலும் அவர்களின் தொழில் மற்றும் கலாசாரத்தினை கருத்திற் கொண்டு அதற்கேற்ற இடங்களில் காணிகளை வழங்கி வருகின்றோம்.

அவ்வாறு காணிகள் வழங்கி மீள் குடியேற்றம் செய்யப்படுபவர்கள் அந்த பகுதியில் தமது உறவினர்களுடன் கூடி வாழ்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் பலாலி வடக்கு, பலாலி கிழக்கு மற்றும் வளலாய் பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளவர்களின் காணிகளைத் துப்புரவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பரிசளிப்பு விழா

(மானிப்பாய்)


மானிப்பாய்சோதிவேம்படிவித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க் கிழமை காலை 9.30 இற்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி சிவகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.தேவமனோகரன் , சிறப்பு விருந்தினராக பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் க.ஜெயந்திரன், கௌரவ விருந்தினராக தினேஷ் வெதுப்பக உரிமையாளர் சி.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கடந்த வருடம் இடம்பெற்ற இணை பாட விதான செய்றபாடுகள், புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றில் சாதனை செய்த மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப் படவுள்ளதுடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (செ-9-23)



அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் கடந்த க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழி மூலக் கல்வியில் 9 "ஏ" சித்தி பெற்ற ஸ்ரீ.விஷ்ணுயாவுக்கு தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் வாழ்த்துமடல் வழங்குவதையும் அகில இலங்கைத் தமிழ்த்தினப் போட்டியில் திறனாய்வில் தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்ற தீபிகா தங்கவேலுக்கு விருந்தினர் பதக்கம் அணிவித்து வாழ்த்துப்பா வழங்கப்படுவதையும் படத்தில் காணலாம்.

# ஈரான் அணுவாயுத விவகாரம்; விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்து



(வோஷிங்டன்)

**ஈரான் அணு ஆயுத விவகாரம் தொடர்பில் விரைவில் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகும் வாய்ப்பு இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.**

வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் அமெரிக்க அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில்,

இந்த விவகாரம் தொடர்பாக ஜெனீவாவில் அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடைபெற இருப்பதாகவும், இது மிகவும் முக்கியமானது என்றும் குறிப்பிட்டார். இந்த பேச்சுவார்த்தையின்போது, ஈரான் அணு ஆயுத விவகாரத்தில் ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அணு ஆயுத விவகாரம் தொடர்பாக ஈரான் மீது புதிய தடைகளை விதிக்கும் வகையிலான எந்தவித நடவடிக்கைகளிலும் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபடக் கூடாது என்றும், அது போன்ற நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடின் ஈரான் தனது அணு ஆயுத திட்டத்தை கைவிடாது தொடர்ந்து முன்னெடுத்து செல்லும் என்றும் அவர் எச்சரித்தார். அது போன்ற நிலை ஏற்படின் வேறு வழியின்றி ஈரானுக்கு எதிராக அமெரிக்காவும் போருக்கு தயாராக வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**6 நாடுகளுடன் பேச்சு:**

அணு ஆயுத விவகாரம் தொடர்பாக, அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா மற்றும் ஜேர்மனி ஆகிய 6 நாடுகளுடன் ஈரான் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. ஜெனீவாவில் இறுதியாக கடந்த வாரம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், அணு ஆயுத திட்டத்தை ஈரான் உடனடியாக நிறுத்துமானால், அந்நாட்டிற்கு எதிராக ஏற்கனவே விதிக்கப்பட்ட தடைகளில் இருந்து நிவாரணம் கிடைக்க வழிவகை செய்வது தொடர்பான முதல்கட்ட ஒப்பந்தம் கையெழுத்திடப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அது தொடர்பாக தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள சரத்துகள் குறித்து ஆலோசனை நடத்த வேண்டியிருப்பதாகவும், எனவே சிறிது கால அவகாசம் அளிக்கும்படியும் ஈரான் கேட்டுக் கொண்டது.

அதுபோன்று, அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட 6 நாடுகளும், ஒப்பந்த சரத்துகளில் தங்களது ஒவ்வொரு நாட்டின் சார்பாகவும் சில மாற்றங்களை செய்யவிரும்பியதாக தெரிகிறது.

இதனால் அந்த பேச்சுவார்த்தையின் போது எந்த ஒப்பந்தமும் கையெழுத்திடப்படவில்லை.

இதனையடுத்து, ஜெனீவாவில் அடுத்த வாரம் அணு ஆயுத விவகாரம் தொடர்பாக அமெரிக்கா, உள்ளிட்ட 6 நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# வீதி விதிமுறைகளை மீறுவோரை தண்டிக்கச் சட்டம் அவசியம்

## பான் கீ மூன் வலியுறுத்து



வீதி விதிமுறைகளை மீறுபவர்களை தண்டிக்க கடுமையான சட்டங்கள் தேவை என ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் வீதி விபத்துக்களில் உயிரிழப்பவர்களை நினைவு கூரும் முகமாக ஆண்டுதோறும் நவம்பர்மாதம் 3ஆவது ஞாயிற்றுக்கிழமை விபத்துக்களுக்கான உலக தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த வகையில் நேற்று விபத்துக்களுக்கான உலக நாளையொட்டி ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது,

ஒவ்வொரு ஆண்டும் வீதி விபத்துக்களால் உலகில் 12 கோடியே 40 இலட்சம் பேர் பலியாகின்றனர். மேலும் ஏறக்குறைய 5 கோடிப் பேர் காயமடைகின்றனர் இவர்களில் சிலர் நிரந்தரமாகவே மாற்றுத்திறனாளிகளாக ஆகிவிடுகின்றனர் என்ற உண்மையை இந்நாளில் அனைவரின் கவனத்துக்கும் கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பாதசாரிகள், மிதிவண்டி ஓட்டுநர்கள் வீதிளைப் பயன்படுத்துவோர் அனைவருக்கும் பாதுகாப்பான நடைபாதைகளை அமைக்கவும், மதுபோதை ஓட்டுநர்கள், அதிவேக ஓட்டுநர்கள் வாகனம் செலுத்தும் போது கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துவோர், வாகனத்தில் பெல்ட் அணியாமல் செல்பவர்கள் ஆகியோரைத் தண்டிப்பதற்கு கடுமையான சட்டங்கள் தேவை எனவும் வலியுறுத்தியுள்ளார் பான் கீ மூன்.

இந்தியாவில் 2011ஆம் ஆண்டில் மட்டும் 44 இலட்சம் வீதி விபத்துக்கள் ஏற்பட்டதாக ஒரு புள்ளிவிபரம் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# சிரியாவில் அமைதி ஏற்படுத்த புடின்-ஆசாத் உரையாடல்

(மொஸ்கோ)

சிரியாவில் அமைதியை ஏற்படுத்த அந்நாட்டு ஜனாதிபதி ஆசாத்துடன் ரஷ்ய ஜனாதிபதி புடின் தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் பதவி விலக வலியுறுத்தி உள்நாட்டு கலவரம் நடந்து வருகிறது.

ஜனாதிபதி ஆசாத்தின் மிக நெருங்கிய நண்பரான ஜனாதிபதி புடின், சிரியாவில் அமைதி ஏற்ப டுத்த நடவடிக்கை எடுக்கலாம் என்று சில யோசனைகளை சிரியாவிற்கு தெரிவித்தார்.

அதன்படி, சிரியாவில் இருந்த இரசாயன ஆயுதங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி புடின், ஆசாத்தை தொலைபேசியில் அழைத்து அமைதி நடவடிக்கை குறித்து விரிவாக பேசினார்.

சிரியாவில் அமைதி ஏற்பட ஜெனீவாவில் நடைபெறும் சமாதான கூட்டத்தில் சிரியா சார்பில் பிரதிநிதிகளை கலந்து கொள்ள அனுமதி வழங்கியது, இரசாயன ஆயுதங்களை அழிப்பது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக புடின் பேசியதாக ரஷ்ய ஜனாதிபதியின் செய்தி தொடர்பாளர் திமித்ரி பெக்கோவ் தெரிவித்தார். (2)

# நைஜீரியாவில் மோதல்; 20 தீவிரவாதிகள் பலி

நைஜீரியாவில் போகோஹாரம் தீவிரவாதிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 20 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

நைஜீரியாவின் ஜனாதிபதி குட்லக் ஜோனாதனின் அரசுத் துருப்புகள் அந்நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள போகோஹாரம் தீவிரவாதிகள் மீது கடந்த இரண்டு நாட்களாகத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

கடந்த நான்கு வருடங்களாகக் கிளர்ச்சியில் ஈடுபட்டு வரும் இந்தத் தீவிரவாதிகள் இயக்கம் இஸ்லாமிய சட்டத்தை நைஜீரியாவில் அமுல்படுத்தும் முயற்சியில் ஆயிரக்கணக்கானோரைக் கொன்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

நைஜீரியாவின் பாலைவனப் பகுதிகளில் இருந்து விரட்டப்பட்ட போகோஹாரம் தீவிரவாதிகள் கமரூன் நாட்டின் எல்லையை ஒட்டியுள்ள கௌசா மலைப்பகுதியின் பிடா நகரத்தில் முகாமிட்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை அரசுத்துருப்பினர் இங்கு தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். போராளிகள் பயன்படுத்தி வந்த 50 மோட்டார் சைக்கிள்களும், மற்றைய வாகனங்களும் அழிக்கப்பட்டன. அரசுத்தரப்பில் ஒரு வீரர் பலியாகி உள்ளார் என்று நைஜீரியப் படைகளின் செய்தித் தொடர்பாளரான லெப்டி னென்ட்கர்னல் முகமது டோல் தெரிவித்தார். (2)

# வியட்நாமில் வெள்ளம்; 19 பேர் உயிரிழப்பு





வியட்நாமில் கடந்த ஒருவாரமாக பெய்த தொடர் மழையால் பல மாகாணங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதில் 19 பேர் பலியாகியுள்ளனா.

வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட குவாங்ன்காய் மாகாணத்தை சேர்ந்த 64 ஆயிரத்து 500 பேர் மற்றும் குவாங் நாம் மாகாணத்தை சேர்ந்த 16 ஆயிரத்து 600 பேர் என 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்களது வசிப்பிடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஹோய் அன் நகரின் பல வீதிகள் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன. அதனைச் சுற்றியுள்ள 2 மாவட்டங்கள் முற்றிலுமாக வெள்ளத்தில் மூழ்கி மிதக்கின்றன. 19 பேர் வெள்ளத்தில் மூழ்கி பலியானதாக தேசிய பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காணாமற்போன 10இற்கும் மேற்பட்டவர்களை தேடும் பணியில் மீட்புப் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். (2)



பிலிப்பைன்ஸ். நாட்டின் கிழக்குப் பகுதியில் தாக்கிய ஹயான் கடும் புயல் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் பலியாகினர். இதில் உயிர் பிழைத்த சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை குடிநீருக்காக காத்திருக்கும் பரிதாப நிலையை படத்தில் காணலாம்.

# மாலைதீவு ஜனாதிபதி தேர்தல்; அப்துல்லா யாமீன் வெற்றி



மாலைதீவில் நடைபெற்ற இரண்டாம் கட்ட ஜனாதிபதி தேர்தலில் அப்துல்லா யாமீன் வெற்றி பெற்றுள்ளார்.

மாலைதீவில் ஜனாதிபதிக்கான தேர்தல் கடந்த 9ஆம் திகதியன்று முதற்கட்டமாக நடைபெற்றது.

இதன் இரண்டாம் கட்ட தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது, இதில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளிவந்துள்ளன. இதில், யாரும் எதிர்பாராத வகையில் அப்துல்லா யாமீன் 51.39 சதவிகித வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். முன்னாள் ஜனாதிபதி முகம்மது நஷீத், 48.61 சதவிகித வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்த நிலையில் உள்ளார்.

தேர்தல் முடிவுகள் குறித்து, மாலைதீவு தேர்தல் ஆணையம் நேற்று முன்தினம் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டது.

இதனையடுத்து நடைபெறும் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் அப்துல்லா யாமீன் அந்நாட்டின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்கிறார். (2)



# சிறுவர் அரங்கம்

640

## மந்திரமலை

...அந்த மலை அப்படியே இரண்டாகப் பிளந்து விழுந்தது. உள்ளே இருந்த அரக்கனின் மாளிகை தெரிந்தது.

அவருக்கு நன்றி சொல்லிவிட்டு அவன் அரக்கனின் மாளிகையை நோக்கிச் சென்றான்.

அந்த மாளிகைக்குள் நுழைந்தான். பெரிய அரண்மனைபோல அந்த மாளிகை காட்சி அளித்தது. ஒவ்வொரு இடமாக இளவரசியைத் தேடிச் சென்றான்.

அங்கே ஓர் அறைக்குள் இருந்து இடிபோன்ற ஓசை வந்தது. எங்கிருந்து ஓசை வருகிறது என்று அந்த அறைக்குள் பார்த்தான்.

அரக்கன் ஒருவன் அங்கே தூங்கிக் கொண்டிருந்தான். பெரிய மீசையுடன் நீண்ட பற்களுடன் பயங்கரமாக இருந்தான்.

அந்த அரக்கனின் குறட்டை ஒலிதான் இடியோசை என்பது அவனுக்குப் புரிந்தது.

அடுத்த அறையைப் பார்த்தான். அங்கே இளவரசி அழுது புலம்பியபடி இருந்தாள்.

அவள் அருகே சென்ற அவன், இளவரசியாரே! என்று அன்புடன் அழைத்தான்.

தலை நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

உங்களை மீட்டுச்செல்லவே வந்துள்ளேன். அர்க்கன் விழிப்பதற்குள் நாம் புறப்பட வேண்டும். விழித்துக்கொண்டால், நமக்கு ஆபத்து. விரைவாகப் புறப்படுங்கள் என்றான்.



கண்களைத் துடைத்துக்கொண்டு அவள் அவனுடன் புறப்பட்டாள்.

இருவரும் அந்த மாளிகையை விட்டு வெளியே வந்தனர்.

முழுநிலவு வர இன்னும் நான்கு மணி நேரமே உள்ளது. பிளந்து கிடக்கும் மலைப் பகுதியை அதற்குள் ஒன்றுசேர்க்க வேண்டும். யாராலும் பிரிக்க முடியாதபடி இறுகக் கட்ட வேண்டும். இல்லையேல் அரக்கன் விழித்துக்கொள்வான். அரக்கன் விழித்துக் கொண்டால் இத்தனை முயற்சியும் வீணாகிவிடும். வழி ஏதும் தெரியவில்லையே என்று தவித்தான் அவன்.

அங்கே இருந்த ஆல மரத்தின் அடியில் கிழவி ஒருத்தி விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். அவன் தலை நிறைய பூ இருந்தது.

அவளிடம் சென்ற அவன் நடந்ததை எல்லாம் சொல்லி பாட்டி! பிளந்து கிடக்கும் இந்த மலையை ஒன்று சேர்க்க வேண்டும். யாராலும் பிளக்க முடியாதபடி இறுகக் கட்ட வேண்டும். இல்லையேல் அரக்கன் விழித்துக்கொள்வான். வழி தெரியாமல் தவிக்கிறேன் என்றான்.

இவ்வளவுதானா? கவலையை விடு என்று தன் தலையில் இருந்து தலை முடியை இழுத்தாள். அந்த முடியின் நடுவில் பெரிதாகச் சுருக்கு ஒன்று போட்டாள். பிளந்து கிடக்கும் மலைப் பகுதிகள் இரண்டையும் சுற்றுமாறு அந்த முடியை வீசினாள். அந்தச் சுருக்கு இரண்டு மலைப் பகுதிகளையும் சுற்றிக்கொண்டு நின்றது. கையில் இருந்த முடியின் இரண்டு நுனிகளையும் இழுத்தாள் அவள். என்ன வியப்பு! அந்தச் சுருக்கு இரண்டு மலைகளையும் சிறுது சிறிதாக ஒன்று சேர்த்தது. மேலும் இழுத்தாள் பாட்டி.

மலைப்பகுதிகள் இரண்டும் சேர்ந்தன. முன்பு இருந்ததுபோல் மலை அங்கே இருந்தது.

பிறகு அவள் அந்தச் சுருக்கு அவிழாத வண்ணம் நான்கைந்து முடிச்சுக்கள் போட்டாள்.



தம்பி! வலிமையான இந்தச் சுருக்கை அவிழ்க்கவோ, அறுக்கவோ யாராலும் முடியாது. அரக்கன் வெளியே வருவான என்று நீ அஞ்ச வேண்டாம். இளவரசியுடன் மகிழ்ச்சியாகப் புறப்படு. நீங்கள் நலமாக இருப்பீர்கள் என்று வாழ்த்தினாள்.

அளவுக்கு நன்றி சொல்லிவிட்டு இளவரசியுடன் புறப்பட்டான்.

இளவரசி உயிருடன் திரும்பியதை அறிந்த அரசனும் மக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். நாடே விழாக்கோலம் பூண்டது.

அவனுக்கும் இள்வரசிக்கும் திருமணம் இனிதே நடந்தேறியது. கோலாகலமாக நடந்த அந்த திருமணத்தில் பல நாட்டு அரசர்களும் கலந்து கொண்டனர். (முற்றும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1421- நெதர்லாந்தில் கடல் தடுப்புச் சுவர் ஒன்று இடிந்து வெள்ளம் பரவியதில் 10 ஆயிரம் பேர்வரையில் உயிரிழந்தனர்.
- 1477- இங்கிலாந்தில் அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்ட முதலாவது நூலான dictes or sayengis of the philosophres வில்லியம் கக்ஸ்டன் என்பவரால் வெளியிடப்பட்டது.
- 1493-கொலம்பஸ் புவேர்ட்டோ ரிக்கோ என இன்றழைக்கப்படும் நாட்டை முதன்முறையாகக் கண்ணுற்றார்.
- 1626- புனித பீட்டர் பசிலிக்கா தேவாலயம் உரோம் நகரில் திறந்து வைக்கப்பட்டது.
- 1803-எயிட்டி புரட்சியின் கடைசிப் பெரும் போர் இடம்பெற்றது. இது எயிட்டி குடியரசு என்ற மேற்கு அரைக் கோளத்தின் முதலாவது கறுப்பினக் குடியரசு அமைக்கப்பட வழிவகுத்தது.
- 1863-டென்மார்க்கின் ஒன்பதாம் கிறிஸ்டியன் ஷ்லெஸ்விக் நகரம் டென்மார்க்குக்குச் சொந்தம் என அறிவிக்கும் சட்டமூலத்துக்கு ஒப்பமிட்டான். இது 1864 இல் ஜேர்மன்-டென்மார்க் போர் ஏற்பட வழிவகுத்தது.
- 1883-கனடாவும் ஐக்கிய அமெரிக்காவும் ஒரே நேர எல்லைகளை வகுத்துக் கொண்டன.
- 1903-பனாமா கால்வாய்க்கு தனிப்பட்ட உரிமையை ஐக்கிய அமெரிக்காவுக்கு வழங்கும் உடன்பாடு பனாமாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் கையெழுத்திடப்பட்டது.
- 1909-நிக்கராகுவாவில் இரண்டு அமெரிக்கர்கள் உட்பட 500 புரட்சியாளர்கள் அரசுப்படையினால் கொல்லப்பட்டதை அடுத்து ஐக்கிய அமெரிக்கா இரண்டு போர்க்கப்பல்களை அந்நாட்டுக்கு அனுப்பியது.
- 1918-லாத்வியா ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1926-ஜோர்ஜ் பேர்னாட் ஷா தனக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசுப் பணத்தை ஏற்க மறுத்தார்.
- 1943-உக்ரேனில் லூவிவ் என்ற இடத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த 6 ஆயிரம் யூதர்கள் நாசிப் படைகளில் கொல்லப்பட்டனர்.
- 1978-கயானாவில் ஜிம் ஜோன்ஸ் என்பவரின் மக்கள் கோயிலில் இடம்பெற்ற கொலை மற்றும தற்கொலை நிகழ்வுகளில் 270 குழந்தைகள் உட்பட 918 பேர் இறந்தனர்.
- 1989-கொபெ செயற்கைமதி விண்வெளிக்கு ஏவப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1923-அலன் ஷெப்பர்ட், விண்வெளிக்குச் சென்ற முதலாவது அமெரிக்கர் (இ.1998)
- 1945-மகிந்த ராஜபக்ச, இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி

**இறப்புக்கள்**

- 1936-வ.உ.சிதம்பரம்பிள்ளை, கப்பலோட்டிய தமிழன் (பி.1872)
- 1952-போல் எல்யூவார், பிரெஞ்சுக் கவிஞர் (பி.1895)
- 1962-நீல்ஸ் போர், இயற்பியலாளர், நோபல் பரிசுபெற்றவர் (பி.1885)

# மகாத்மாவாக வாழ்வோம்...



**கே**ள்வி:- மற்றவர்களிலிருந்து வேறுபட்டு சமூகத்தில் என் பெயரையும் பதித்து விட்டுப்போக ஆசையாக இருக்கிறது. அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

சத்குரு:-ஊழலிலே மூழ்கிப் போன ஓர் அரசியல்வாதி தனியே ஓய்வு எடுக்க கடற்கரைக்குச்சென்றார். தண்ணீரில் கால்களை நனைத்து அவர் நின்றிருந்தபோது, திடீரென்று அலைகள் அவரை உள்ளே இழுத்துச் சென்றுவிட்டன.

இதைக் கவனித்த இளைஞன் ஒருவன் தண்ணீரில் பாய்ந்தான். அவரைக் காப்பாற்றி கரை சேர்த்தான். அரசியல்வாதி வெலவெலத்துப்போயிருந்தார். நன்றி தம்பி. எனக்குப் பெரும் செல்வாக்கு இருக்கிறது. உனக்கு என்ன வேண்டுமோ கேள். நிறைவேற்றி வைக்கிறேன்.

ஐயா! என் இறுதிச் சடங்குகளை இராணுவ மரியாதையுடன் செய்ய வேண்டும். இதுவே என் ஆசை.

அரசியல்வாதி திகைத்தார். தம்பி, இவ்வளவு இளைஞனாக இருக்கிறாய். அதற்குள் உனக்கு எதற்கு மரணத்தைப் பற்றிய கவலை?

நான் கடலில் இருந்து யாரைக் காப்பாற்றி இருக்கிறேன் என்பது வெளியில் தெரிந்தால், என் உயிருக்கு ஏது ஐயா உத்தரவாதம்? என்றான் இளைஞன் நடுக்கத்துடன்.

இப்படிப்பட்ட அரசியல்வாதிகள் நிறைந்த இன்றைய நம்நாட்டில் மகாத்மா காந்தி தனது நேர்மையான கொள்கைகளை வைத்துக்கொண்டு தேர்தலில் நின்றால் வெற்றி பெற முடியுமா என்பதே சந்தேகம்தான்.

அவர் வாழ்ந்த காலகட்டத்திலும் தான் பெருமைக்குரியவராக அறியப் பட வேண்டும் என்ற முனைப்புடனா செயற்பட்டார்? இல்லை. தன் தனிப் பட்ட தேவைகளைப் பின்தள்ளி வைத்துவிட்டு, தேசத்துக்கு எது தேவையானதோ, அதற்கு அவர் முக்கியத்துவம் தந்தார். அதனால், பெருமை பெற்றார்.

உங்களுக்கு என்ன கிடைக்கும் என்ற ஆதாயக் கணக்கை நீக்கிவிட்டு

## எனக்கு என்ன கிடைக்கும்..? நான் என்ன ஆவேன்..? என்பதை நீக்கிவிட்டு பிறருக்காக வாழ்ந்து பாருங்கள்



உங்களைச் சுற்றியுள்ள வாழ்க்கையைக் கவனியுங்கள். தானாகவே உங்களால் என்ன செய்ய முடியும் என்பதைத் தான் கவனிப்பீர்கள். தேவையானதைச் செய்வதற்கு உங்கள் திறமையை இன்னும் எப்படி மேலோங்கச் செய்யலாம் என்று யோசிப்பீர்கள். திறமைகளைக் கூர்தீட்டிக்கொள்வீர்கள்.

நம் நாட்டில் செய்து முடிப்பதற்கு இன்னும் பல நூறு விடயங்கள் மிச்சம் இருக்கின்றன. அவற்றைக் கவனிக்காது, உங்கள் தேவைகளை முன்னிறுத்தி மட்டுமே வேலைகளைத் தேடுவதால்தான் அவை கிடைப்பதில்லை.

ஆன்மீகம் 41

எனக்கு என்ன கிடைக்கும்? என்ற கணக்கு விலகியவுடன் நீங்கள் பிரகாசிக்கத் துவங்கிவிடுவீர்கள். உங்களுக்கு எந்த அளவுக்குப் பெருமை கிடைக்கும், எந்த அளவுக்கு மதிப்பு கிடைக்கும் என்பதெல்லாம் உங்கள் திறனைப் பொறுத்துதான் அமையும்.

தேசத்தில் உயர்ந்தவராக நீங்கள் அறியப்படலாம். அல்லது, உங்கள் ஊரில் பெருமைமிக்கவராக மாறலாம். உங்கள் தெருவில் கவனிக்கப்படுபவராக இருக்கலாம். எதுவும் இல்லாமல், உங்கள் வீட்டளவில் மட்டுமே நீங்கள் சிறப்பானவ்ராக மதிக்கப்படலாம். அதனால் என்ன?

மற்றவர்கள் உங்களை மகாத்மா என்று அழைக்கட்டும். அழைக்காமல் போகட்டும். அது ஒரு பொருட்டல்ல. உங்கள் அளவில் நீங்கள் மகாத்மாவாக உணர்வீர்கள். மகாத்மாவாக மகிழ்வீர்கள்! (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# சுயநலவாதிகளின் கூட்டிணைப்பில் மயான நாட்டில் ஒரு மாநாடு!

**கொ**ழும்பில் ஆரம்பமான பொது நலவாய மாநாடு, மகிந்த ராஜபக்சவின் அம்பாந்தோட்டையில் முடிவடைகிறாது.

நவம்பர் 15ஆம் திகதிதான் தலைவரகள் மாநாடு ஆரம்பம். ஆயினும் 10ஆம் திகதியிலிருந்தே கால்கோள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகிவிட்டன.

மகிந்த ராஜபக்சவை ஒரு மாமன்னர் ஆக்குவது போன்ற ஒரு மாயையை ஏற்படுத்தும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும்

**மூன்று மாதங்களுக்கு முன்னர் நவநீதம்பிள்ளை அம்மையார் முள்ளிவாய்க்காலில் செய்ய முடியாதுபோன மலர் அஞ்சலி வணக்கத்தை, கனடியப் பிரதிநிதி தீபக் ஒபராய் எவருக்கும் முற்கூட்டி அறிவிக்காது ஆனையிறவில் அமைதியாக நிறைவேற்றியுள்ளார்.**



மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அதற்கும் அப்பால், ராஜபக்ச குடும்பத்தவர்கள் அனைவரையும் ஒன்றுசேர்த்து உச்சத்துக்குக் கொண்டுசெல்லும் நோக்கம் ஒவ்வொரு நகர்விலும் நன்கு தெரிந்தது.

பொதுநலவாய அமைப்பின் தலைவி எலிசபெத் மகாராணிக்குப் பதிலாக அவரின் மூத்த புதல்வரான இளவரசர் சார்ள்ஸ் தமது இரண்டாவது மனைவி கமிலா சகிதம் 14ஆம் திகதி கொழும்பை வந்தடைந்தார்.

அன்றுதான் அவரின் 65வது பிறந்த நாள். இவரது 65வது பிறந்த நாள் சிறப்பு நிகழ்ச்சியாக 15ஆம் திகதி அலரிமாளிகையில் நடைபெற்றது.

54 நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுநலவாய அமைப்பின் இலங்கை மாநாட்டைப் பகிஷ்கரிக்கப் போவதாக முதலில் அறிவித்தவர் கனடியப் பிரதமர் ஸ்டீபன் ஹாப்பர்.

மனித உரிமை மீறலகள், பொறுப்புக்கூறல் மறுப்பு போன்றவையே இதற்கான காரணம்.

மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லையென அடுத்து அறிவித்தவர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங். காங்கிரஸ் கட்சி உட்பட தமிழ்நாட்டின் சகல கட்சிகளும் மன்மோகன் சிங் மாநாட்டில் பங்குபற்றுவதை எதிர்த்து வந்தன.

அரசியலில் இருந்து ஓய்வுபெறும் காலம் நெருங்கும்போது, எதற்காக சர்ச்சைக்குள் சிக்க வேண்டும் என்று மௌனசாமியாக விளங்கும் மன்மோகன்சிங் நினைத்தது, இலங்கை முற்றிலும் எதிர்பாராதது.

இருப்பினும், இதனைக் காட்டிக்கொள்ளாது, இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் பங்குபற்றியது தமக்கு திருப்தி தருவதாக மகிந்த கூறியுள்ளார்.

இலங்கையின் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டி மாநாட்டைப் புறக்கணித்த அடுத்த தலைவர் மொறிசியஸ் பிரதமர் நவிசந்த்ரராம்கூலம்.

2015இல், அடுத்த பொதுநலவாய மாநாடு மொறிசியசில் நடைபெறவிருக்கும் நிலையில், கொழும்பு மாநாட்டைப் புறக்கணிக்க இவர் எடுத்த முடிவு மனிதநேயவாதிகளால் வரவேற்கப்படுகின்றது.

யாழ்.குடாவுக்கு வந்திறங்கிய பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் யாழ். பொதுநூலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போதே இராணுவ மயமாக்கலே வடக்கில் பெரும் பிரச்சினையாக உள்ளது. இதனால் தமிழ் மக்களின் சொந்த நிலங்கள் படைகளினால் அபகரிக்கப்படுகின்றன. வீடுகள் இடித்தழிக்கப்படுகின்றன, இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேறாமல் உள்ளனர். தமிழரின் பொருளாதாரம் பாதிப்படைந்துள்ளது.

மனித உரிமை மீறல்களில் படையினர் ஈடுபடுகின்றனர். பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமிழ் மக்கள் இங்கு வாழ்கின்றனர். அதேவேளை, இராணுவத்தினரின் குடும்பங்கள் மற்றும் சிங்களக் குடும்பங்களைக் குடியமர்த்தி வடக்கில் இனப்பரம்பலை மாற்றியமைக்க அரசு திரைமறைவில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்றும், சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்துடன் நிலையான - நிரந்தர அரசியல் தீர்வையே தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர். இந்தத் தீர்வு அனைவரும் ஏற்றுக்கொள்ளகூடிய சமஷ்டி அடிப்படையில் அமைந்திருக்கவேண்டும் என்று கூட்டமைப்பினர் தெவித்தனர்.

இதனைக் கேட்டறிந்தபின் கருத்துத் தெரிவித்த பிரிட்டன் பிரதமர்,

வடக்கு மாகாணத்தில் இராணுவ ஆக்கிரமிப்புக்கள் உடனே நிறுத்தப்படவேண்டும் என்பதிலும், படைகளின் பிரசன்னம் குறைக்கப்படவேண்டும் என்பதிலும் பிரிட்டன் உறுதியாகவுள்ளது. இதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமேயில்லை. சர்வதேச சமூகமும் இதனையே விரும்புகின்றது. அதேவேளை, வடக்கில் தமிழ் மக்கள் எந்தவித அச்சுறுத்தல்களுமின்றி சுதந்திரமாக வாழவேண்டும். இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை இந்நாட்டு அரசு உடனே நிறுத்தவேண்டும்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ அரசால் வலுக்கட்டாயமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டதிலிருந்து இலங்கையின் நீதித்துறை செயலிழந்துவிட்டது. எனவே, சர்வதேச அழுத்தங்கள் ஊடாகத்தான் இலங்கையில் எந்தப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வைக் காணலாம்.

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் மற்றும் காணாமல்போனோர் தொடர்பில் நீதியான - பக்கச்சார்பற்ற - சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய விசாரணைகள் உடன் நடத்தப்படவேண்டும். இல்லையெனில் சர்வதேச விசாரணையை பிரிட்டன் வலியுறுத்தும் என்று பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரூன் தெரிவித்தார்.

கமரூன் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயமானது 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் சர்வதேச தலைவர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயமாக கருதப்படுகிறது.

-பனங்காட்டான்- (தொடரும்)

# புலிகளுக்கு ஆதரவாக கமரூன் செயற்படுகிறார்

## குற்றம் சுமத்துகிறார் கோத்தபாய

(கொழும்பு)

**பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.**



பிரித்தானிய தமிழர் பேரவை மற்றும் இனச் சுத்திகரிபபுக்கு எதிரான தமிழர் அமைப்பு ஆகியவற்றின் தூண்டுதலின் பேரில அவர் செயற்பட்டு வருவதாக பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு முன்னதாக பிரித்தானிய பிரதமர், தமிழ் புலம்பெயர் அமைபபுக்களுடன் சந்திப்புக்களை நடத்தியுள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்து டேவிட் கமரூனின் கட்சி இலங்கை மீது அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது.

இலங்கையை ஓர் பிரித்தானிய காலனியாகக் கருதியே அவர் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

எமது நாட்டின் உள்ளூர் விசாரணைகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை.

சனல்4 ஊடகத்தின் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எந்த விசாரணைகளும் நடத்தப்படுவதை தாம் ஏற்றுக்கொள்ள முடியாது



எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈராக்கில் பிரித்தானியா மேற்கொண்ட குற்றச் செயல்கள் தொடர்பில் இன்னமும் விசாரணைகள் பூர்த்தியாகவில்லை.

அத்தோடு இலங்கையில் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தற்போது பிரித்தானியா உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்து வருவதாகவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார். (செ-2)

# வடகிழக்கு கல்வி நிலைமை மிகவும் பின்னடைவிலுள்ளது

## முன்பள்ளி திறப்பு விழாவில் சித்தார்த்தன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு பகுதிகளின் கல்வி நிலைமை மிகவும் பின்னடைவில் உள்ளது என வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்.சுழிபுரம் பாரதி முன்னிலைப் பள்ளியின் கட்டடத் திறப்புவிழா நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினராக பிரதேச சபைத் தலைவர் நாகரஞ்சினி ஐங்கரனும் பங்கேற்றிருந்தார். இதன் போது பாரதி முன்னிலைப் பள்ளியின் பழைய மாணவ, மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இங்கு விசேட அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய வட மாகாணசபை உறுப்பினர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது லண்டனில் வசிக்கும் இதே ஊரைச் சேர்ந்த ரவிசங்கர் அங்கிருந்து இங்கு வந்து போது இந்த பாரதி முன்னிலைப் பள்ளி கட்டடத்திற்கென பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து இக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்துள்ளார்.

தனது தந்தை மற்றும் சகோதரரின் நினைவாக அதனை அவர் செய்துள்ளார்.

27இலட்சம் ரூபாவுக்கும் மேலாக அவர் இதற்கு செலவு செய்துள்ளார். இது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். வெளிநாடுகளில் இவ்வாறான பலர் இருக்கின்ற போதிலும் ஒரு சிலரே இவ்வாறாக பெரியளவிலான உதவிகளை செய்கின்றனர். எனவே இந்த உதவியைச் செய்து கொடுத்த ரவிசங்கருக்கு இக்கிராம மக்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

தற்போது வடக்கு -கிழக்கு பகுதிகளின் கல்வி நிலைமை மிகவும் பின்னடைவில் உள்ளது.

எனவே, இவ்வாறானவர்கள் கல்விக்கு ஊக்கம் தந்து வடக்கு - கிழக்கு பகுதி களை கல்வியில் தலைநிமிரச் செய்ய உதவியாகவும் உறுதுணையாகவும் நிற்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## வாகன விபத்து 6 பேர் பலி; 15 பேர் படுகாயம்

(கொழும்பு)

வாகன விபத்தில் 6 பேர் பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி தலவத்து ஓயா ஹாரகம பிரதேசத்தில் நேற்று காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

வான் ஒன்றும் பேருந்து ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் இரண்டு சிறுவர்கள் அடங்குகின்றனர்.

மேலும் சம்பவத்தில் படுகாயமடைந்த 15 பேர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கண்டியில் இருந்து பதுளை நோக்கி சென்றவான் ஒன்றே இந்த விபத்தில் சிக்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

தலவத்து ஓயா பொலிஸார் இந்த விபத்து சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-2)

## "வணக்கம்" நீக்கப்பட்டு எழுதப்பட்டது "ஆயுபோவன்"

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டு இலட்சினையில் "வணக்கம்" என்ற பதம் நீக்கப்பட்டு "ஆயுபோவன்" என்ற சிங்கள மொழிப் பதத்தை தமிழில் எழுதியது ஏன்? என்று வெளிநாட்டு தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு அதற்கான பொறுப்புக் குழுவில் தான் இடம் பெறவில்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பதிலளித்துள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டு இலட்சினையில் அழகான தமிழில் "வணக்கம் " என்று எழுதப்பட்டிருந்ததற்கு மேலாக "ஆயுபோவன்" என்ற சிங்கள வார்த்தை தமிழில் ஒட்டப்பட்டிருந்தது. இதனையிட்டு இதற்கான காரணத்தை அந்த ஊடகவியலாளர் கேள்வியாக எழுப்பியுள்ளார்.

இதற்கு ஒரே வரியில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பதிலளித்த பின்னர் அநுரபிரியதர்ஷன யாப்பா அந்த ஊடகவியலாளரை நோக்கி நீங்கள் வேண்டுமென்றே இந்தக் கேள்வியை எழுப்புகின்றீர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். (செ-2)

## எந்த வேளையிலும் விவாதம் செய்ய நான் தயார்-கெல்லம் மக்ரே

(கொழும்பு)

பிரித்தானியாவின் சனல்4 படத்தயாரிப்பாளர் கெல்லம் மகரேயுடன் விவாதத்துக்கு தாம் தயார் என்று ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்திருந்த நிலையில் அதற்கு தாம் தயாரென கெல்லம் மக்ரேயும் அறிவித்துள்ளார்.

முன்னதாகவே சனல்4 விபரணம் நியூயோர்க்கில் வெளியிடப்பட்ட பொழுது, அதில் 7 நிமிடங்கள் வரை உரையாற்றுமாறு ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பாலித கோஹனவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எனினும் அதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

இந் நிகழ்வுக்கு சவேந்திர சில்வாவே பொருத்தமானவர் என்று கோஹன குறிப்பிட்டிருந்தார்.



இந் நிலையிலேயே இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் கெல்லம் மக்ரே தயாரித்துள்ள விபரணப்படங்கள் தொடர்பில் சவேந்திர சில்வா இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

இந்த விவாதத்தை ஏற்றுக்கொண்டுள்ள மக்ரே, அதற்காக நியூயோர்க் செல்வதற்கு தம்மிடம் நிதி வசதியில்லை என்றும் எனினும் எந்த நேரத்திலும் விவாதத்துக்கு தாம் தயார் என்றும் தெரிவித்துள்ளார். (செ-2)

## ஒரு தலைப்பட்சமான செயற்பாடு பிரச்சினைகளை உருவாக்கும்

### லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டிற்குபின்னர் நாடுபயன்களை பெறவேண்டுமாயின் நாடு கையெழுத்திட்டுள்ள இணக்கப்பாடுகளின் அடிப்படையில் நடந்து கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸமன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனித உரிமைகளை பாதுகாத்தல், நீதித்துறையின் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம உட்பட பல இணக்கப்பாடுகளில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

இவற்றை புறந்தள்ளி தொடர்ந்தும் செயற்பட்டால் பொது நலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தியதன் மூலம் கிடைக்கக்கூடிய எந்த பயனும் கிடைக்கப் போவதில்லை.

பல பில்லியன் ரூபா பணத்தை செலவிட்டு அரசாங்கம் நடத்தி வரும் இந்த மாநாட்டின் மூலம் உரிய பலனை பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளதாக தெரியவில்லை.

அரசாங்கம் தொடர்ந்தும் ஒரு தலைப்பட்சமாக செயற்பட்டால் மாநாட் டின் பின்னர் நாடு மேலும் பல பிரச்சி னைகளை சந்திக்க நேரிடும் என்றார். (2)





யா/ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இராணுவத்தினரின் கெடுபிடிகள் வடமாகாண சபையையும் தாக்கும்

## எதிர்வு கூறுகிறார் விந்தன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைக்கு இராணுவத்தினரால் கெடுபிடிகள் வரக் கூடும் என வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

அத்தோடு காணாமற் போனவர்கள் கண்டறியப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபன அறிக்கையிலும் இவை வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த 60 வருட காலமாக இலங்கையில் ஆட்சிப் பீடமேறிய அரசாங்கங்கள் தமது அதிகாரத்தை சரியான முறையில் பயன்படுத்தவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார். வடக்கு மாகாண சபைக்கும் இராணுவத்தினரால் கெடுபிடிகள் வரக் கூடிய சூழ்நிலையுள்ளது. ஆதலால் படைத் தரப்பினரின் தலையீடுகளையும் கெடுபிடிகளையும் தடுத்து நிறுத்த வேண்டும் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

மக்களின்காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமித்து வைத்திருக் கின்றனர். கடற்றொழிலுக்கு மீனவர் கள் செல்ல முடியாதவாறு பல இடையூறுகள் ஏற்படுத்தப்படுகின்றது.

வாடகை வீடுகளிலும் நண்பர்கள், உறவினர்கள் வீடுகளிலும் இடம் பெயர்ந்த மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் இராணுவத்தினர் தமது குடும்பங்களுடன் குடியேறுவதிலும் ஹோட்டல்கள் அமைப்பதிலும் விளையாட்டு மைதானம் அமைப்பதிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். நாவற்குழியில் சிங்களவர்களைக் குடும்பமாக குடியேற்ற அரச திணைக்களம் காணிகளை வழங்கியுள்ளது.

அரச தொழில் நிமிர்த்தம் வடக்கிற்கு வருகை தந்தவர்கள் பலர் கடந்த கால த்தில் இங்கு வாழ்ந்துள்ளனர்.

அவர்களில் பலருக்கு இங்கு பிள்ளைகள் பிறந்துள்ளன. அதற்காக அவர்கள் தமது பூர்வீகம் இது தான்எனஉரிமைகொண்டாடமுடியாது.

அப்படியானால் தென்னிலங்கையில்பிறந்ததமிழர்களுக்கும்அரசாங்கம் தென்பகுதியில் காணிகளை வழங்கி அவர்களைக் குடியேற்றுமா? அதற்கு இந்த அரசாங்கம் தயாராகவுள்ளதா? இடம்பெயர்ந்த தமிழ் மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற விடாது இந்த அரசாங்கம் அரச காணியை கொடுத்து அவர்களைக் குடியேற்றும் என்பதில் எங்களுக்கு துளியளவும் நம்பிக்கை கிடையாது. வடக்கிலுள்ள அரச காணிகளில் சிங்களக் குடும்பங்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுத்து வரும் இந்த அரசாங்கம் காலப்போக்கில் சிங்களவர்கள் வாழும் கிராம சேவகர் பிரிவுகளை விரிவுபடுத்தியும் பௌத்த விகாரைகளை அமைத்தும் சிங்கள பிரதேச செயலாளர் பிரிவுகளை உருவாக்கியும் சிங்கள அரசியல் தலைவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதியை சிங்களமயமாக்க நீண்டகாலத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. எனவே இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையில் பாகுபாடுகளையும் விரோத மனப்பாங்கையும் அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கைகள் தொடரும் நிலையில் இனப்பிரச்சினை மட்டும் தீரப்போவதில்லை. தமிழர்கள் பிரிவினைக்கு இடம்கொடுப்பவர்களும் பிரிந்து போகப் போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## நியூசிலாந்திற்கு யானை அன்பளிப்பு

நியூசிலாந்து நாட்டுக்கு இலங்கை, யானை ஒன்றை வழங்கவுள்ளது.

இந்த கையளிப்பு தொடர்பான உடன்படிக்கைகள் கொழும்பில் கைச்சாத்திடப்பட உள்ளன.

கொழும்பில் நடைபெற்ற சர்ச்சைக்குரிய பொதுநலவாய நாடுகளின் மாநாடு தொடர்பான நியூசிலாந்தின் நிலைப்பாட்டை பாராட்டி இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புச் சின்னமாக இலங்கை அரசு நியூசிலாந்துக்கு யானையை வழங்கவிருப்பதாக நியூசிலாந்து ஊடகங்கள் நேற்று காலை செய்தி வெளியிட்டுள்ளன. (செ-2)

## பொதுநலவாய பிரதிநிதிகள் 15 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்

பொதுநலவாய மாநாட்டின் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக கொழும்பிற்கு வருகை தந்த 15இற்கும் அதிகமான வெளிநாட்டு பிரதிநிதிகள் சுகவீனமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

பொதுநலவாய மாநாட்டுப் பிரதிநிதிகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிறப்பு அலகு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு நேற்றுமுன்தினம் வரை 15இற்கும் அதிகமான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பல்வேறு நோய்களினால் சிறியளவில் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் ஒருவர் மட்டும் , கட்டண விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றுக் கொண்டு நேற்று முன்தினம் காலை வெளியேறியுள்ளார்.

மற்றொரு பிரதிநிதி மலேரியா நோயால் பாதிக்கப்பட்டு தொற்று நோய் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே பொதுநலவாய மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கென சேவையாற்ற 200 வைத்தியர்களும் மற்றும் 70 நோயாளர் காவு வண்டிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

## கசினோவை எதிர்த்து களமிறங்குகிறது ஹெல உறுமய

### பட்ஜெட்டிற்கு எதிராகவும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கையில் கசினோ சூதாட்ட நிலையங்கள் ஏற்படுத்தப்படுவது மற்றும் முன்னதாகவேயிருக்கும் கசினோ நிலையங்களுக்கு எதிராக மக்களைத் தெளிவுப்படுத்தும் கூட்டங்களை நடத்த ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் இந்தக் கூட்டத் தொடரின் ஆரம்பக் கூட்டம் அடுத்த வாரம் கொழும்பில் ஆரம்பிக்கப்படும் என அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த சிறிவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

சகல மாகாணங்களிலுமுள்ள பிரதான மாவட்டங்களில் கசினோ வர்த்தகர்களுக்கு இலங்கையில் முதலீடு செய்ய இடமளிக்கப்பட்டமைக்கு எதிராக கூட்டங்களை நடத்தி மக்களை தெளிவுபடுத்த வுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ள 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக கொழும்பில் நாளை மறுதினம் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தொழிற்சங்கங்கள் இணைந்து குறித்த ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளன.

சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக முன்வைக்கப்பட்ட 21 கோரிக்கைகள் குறித்து எந்த கவனமும் செலுத்தாமை, அதற்குரிய பதிலை அளிக்காமை ஆகியவற்றுக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளதாக ஜே.வி.பியின் தொழிற்சங்க தலைவர்களில் ஒருவரான வசந்த சமரசிங்க தெரிவித்தார். (செ-2)

## 300 வெளிநாட்டுப் பிரஜைகள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

இவ்வாண்டின் முதல் பத்து மாதங்களில் 300 வெளிநாட்டுப் பிரஜைகள் கறுப்புப் பட்டியலிடப்பட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

சுற்றுலா விசா மூலம் இலங்கை நாட்டுக்குள் பிரவேசித்தவர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்திய மற்றும் பாகிஸ்தானியர்களே அதிகளவில் இவ்வாறு விசா சட்டங்களை மீறி இலங்கையில் தொழில்களில் ஈடுபட்டு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

குடிவரவு குடியகல்வுத் திணைக்கள புலனாய்வுப் பிரிவினர் நடத்திய தேடுதல்களின் மூலமே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-2)

## படகு அகதிகளை தடுத்து நிறுத்த கடற்படைப் படகுகளை வழங்குகிறது ஆஸி

இலங்கையில் இருந்து தமது நாட்டுக்கு வரும் அகதிகளைத் தடுப்பதற்காக இலங்கைக்கு இரண்டு கடற்படைப் படகுகளை வழங்க அவுஸ்திரேலியா தீர்மானித்துள்ளது.

இலங்கையின் பொதுநலவாய நாடுகள் அமர்வில் பங்கேற்ற அவுஸ்திரேலியாவின் பிரதமர் டோனி அபோட் இந்த தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

ஆட்கடத்தல் செய்வர்கள் சட்ட விரோதமாக செல்லும் படகு அகதிகளுக்கு மரணத்தை உறுதிமொழியாக வழங்குகிறார்களே தவிர வாழ்க்கையை அல்ல என்று அபோட் கொழும்பில் வைத்து தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கைக்கு வழங்கப்படும் படகுகள் அவுஸ்திரேலியாவால் 10 வருடங்கள் பயன்படுத்தப்பட்ட நிலையில் முழுமையான பயன்பாட்டு நிலையில் உள்ளன என்றும் இப் படகுகளின் உதவியுடன் சர்வதேச, இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய கடற்பரப்பில் வைத்து படகு அகதிகள் தடுக்கப்படுவார்களாயின் அவர்கள் உடனடியாக அங்கிருந்தே நாடு கடத்தப்படுவர் என்று அபோட் தெரிவித்துள்ளார். (செ-2)

## மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி சம்பூர் மக்கள் போராட்டம்

இலங்கை அரசாங்கத்தின் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக தமது இருப்பிடங்களை இழந்த சம்பூர் பிரதேச மக்கள் தமது மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இப்போராட்டத்தில்கலந்து கொண்ட மக்கள் தமது மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி பதாகைகளையும், வாசக அட்டைகளையும் தாங்கி நின்ற போதிலும், பொலிஸார் அதற்கு தடைவிதித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எஸ்.சிறிதரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இப் போராட்டத்தில் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி சம்பூரில் இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதல்களை அடுத்து, தமது இருப்பிடங்களை விட்டு அப்பிரதேச மக்கள் வெளியேறியிருந்தனர்.

இந்நிலையில், இப்பிரதேசத்தில் இந்தியாவின் உதவியுடன் அனல் மின் நிலையம் அமைக்கப்பட உள்ளதால், இலங்கை அரசாங்கத்தினால் இப்பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் அங்கு வாழ்ந்த சுமார் ஆயிரத்து 300 குடும்பங்கள் தமது சொந்தக் காணிகளில் மீள்குடியேற முடியாது உள்ளனர்.

கொழும்பில் பொதுநலவாய மாநாடு இடம்பெறும் வேளையில், தமது மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி வலிகாமம் வடக்கு மக்கள் நடத்தியிருந்த தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்து, இப்போராட்டம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா உட்பட விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# ஐ.நா. மீதான தமிழர் தரப்பின் குற்றச்சாட்டுக்களும் வழக்குப் பதிவும்

...நம்பியார் தொடக்கம் சார்ள்ஸ் பெற்றி வரை பான்கிமூன் ஐ.நா விதிகளை மீறியிருக்கிறார். இதை நாம் சொல்லவில்லை. இன்னர்சீற்றி பிரெஸ் விரிவாகவே பதிவு செய்திருக்கிறது.

முதலில் நம்பியார். வெள்ளைக கொடி விவகாரம் தொடக்கம் பல சதிகள் செய்தவர் இவர்தான். "ஐ.நாவின் தூதுவராக வந்த நம்பியாரின் பங்களிப்பு சந்தேகத்திற்கிடமானது... அவரின் சகோதரர் சரிஷ் 2002 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை இராணுவத்துக்கு ஆலோசகராக இருந்துள்ளார். இலங்கை இராணுவத்தின் தலைமைக் கட்டளை அதிகாரி சரத் பொன்சேகாவுக்கு ஒரு சிறந்த இராணுவத் தலைவனின் தன்மைகள் உள்ளன என்று சரிஷ் ஒரு தடவை பாராட்டியுமுள்ளார்" என்று வெள்ளைக்கொடி விவகாரத்தில் பங்கெடுத்த ஊடகவியலாளர் மேரி கொல்வின் பதிவு செய்திருக்கிறார்.

அடுத்து, தமிழின அழிப்பை நடத்தி முடிக்க ஏதுவாக, பான் கீ மூன் இந்திய கைக்கூலி நம்பியாரை களம் இறக்கியதுபோல் நடந்து முடிந்த இன அழிப்பை மறைக்கவே, நோர்வே கைக்கூலி சார்ள்ஸ் பெற்றியை ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்ட போரில் ஐ.நாவின் செயற்பாடுகள் குறித்து ஆராய எகிப்தைச் சேர்ந்த தொராயா ஒபெய்ட் என்ற அதிகாரி நியமனத்திற்கு பதிலாக நியமித்திருக்கிறார் பான் கீ மூன்.

இவர் 4 மாதத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையை 9 மாதங்கள் கடந்தும் சமர்ப்பிக்காது மௌனம் சாதித்து வருவதாக இன்னர்சிற்றி பிரஸ் குற்றம் சுமத்தியது. இந்த சார்ள்ஸ் பெற்றி தான் விதிகளுக்கு முரணாக ஐ.நா நிபுணர் குழு அறிக்கையை பார்வையிட்டவர்.

அடுத்து, இலங்கையில் இறுதி யுத்தத்தின்போது, 40ஆயிரத்துக்கும் அதிகமான பொது மக்கள் கொல்லப்பட்டனர் எனவும் அதற்கான காணொலி ஆதாரங்கள் உள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி கிறிஸ்டொப் ஹென்ஸ் தெரிவித்த பின்னரும், எந்தவிதமான காத்திரமான நடவடிக்கைக்கும் பான் கீ மூன் உத்தரவிடவில்லை.

மாறாக இன அழிப்பு அரசின் இராணுவ அதிகாரிகள் ஐ.நா பதவிகளையும் தூதரக பதவிகளையும் அலங்கரித்தார்கள்.

அடுத்து வன்னிப் போரில் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை ஐ.நா நிபுணர் குழு அறிக்கையின்படி 40,000 ஆகும். அந்த அறிக்கையை தயார் செய்த மூவர் குழுவில் ஒருவரான ஜஸ்மின சூக்கா அண்மையில் ஊடகவியலாளர பிரான்சிஸ் .கரீசனிடம் தனிப்பட்ட முறையில் சொல்லியிருக்கும் எண்ணிக்கை 75,000 ஆகும்.

ஆனால், அவர் ஏன் அதை நிபுணர் குழு அறிக்கையில் பதிவு செய்யவில்லை என்பதற்கு இன்று வரை பதிலில்லை. 35,000 பேரை ஐ.நா தெரிந்தே விழுங்கிவிட்டது. ஆனால், வண பிதா ராஜப்பு ஜோசப்பு அடிகளார் போன்றவர்கள் சொல்லும் உண்மையான எண்ணிக்கை 1,46,679 ஆகும்.

இப்படி எண்ணற்ற- திகிடுதத்தங்கள் தமிழினத்திற்கு எதிராக ஐ.நாவிற்குள்ளேயே நடந்தது - இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன.

### ஐ.நா.மனித உரிமைகள் சபையும் நவநீதம்பிள்ளை அம்மையாரும்..

தற்போது ஐ.நா மனித உரிமை சபையை முன்வைத்தும் நவநீதம்பிள்ளை என்ற அடையாளத்தை வைத்தும் எம்மை மடைமாற்றும் வேலையில் எமக்குள்ளிருந்தே பலர் புறப்பட்டிருக்கிறார்கள். அரசியல் அறிவீனம் மட்டமல்ல, மிக மோசமான முட்டாள்த்தனத்தின் அடையாளமும் இது.

நவநீதம்பிள்ளை ஒரு மாயத் தோற்றம். நல்லிணக்க ஆணைக் குழுவும் 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் இன அழிப்பிற்கு தீர்வாக திணிக்க முற்படும் ஐ.நாவின் கைப்பொம்மைதான் அவர்.

பொறுப்பு வாய்ந்த ஐ.நா உயர் பதவியில் உள்ள ஒருவர் வெறும் வாய்மொழி செய்திகளை வைத்து "தீர்ப்பு" வழங்கியிருக்கிறார். என்ன கொடுமை இது? தமிழின அழிப்பு தொடர்பாக ஐ.நா மட்டத்தில் எல்லோருமே இதைத்தான் செய்கிறார்கள்.

ஐ.நா வின் நீதி மீது முழுமையாக நாம் நம்பிக்கை இழந்த தருணம் அது. காரண காரியங்களையும் வெறும் வாய்மொழி வாக்குமூலங்களையும் வைத்து தீர்ப்பு எழுதுவதென்றால் வன்னியில் கொல்லப்பட்ட 1,46,679 பேருக்குமான தீர்ப்பை இலங்கைக்கு எதிராக எழுதலாமே. அதை ஏன் நவநீதம்பிள்ளை செய்யவில்லை?

மாறாக மயிலிறகால் இன அழிப்பை வருடிவிட்டு போயிருக்கிறார். நாம் விழித்து கொள்ள வேண்டும். நாம் தோற்றாலும் பரவாயில்லை, அழிந்தாலும் பரவாயில்லை இந்த முட்டாள்தனங்களையும் அயோக்கியத்தனங்களையும் பார்த்துக கொண்டு பேசாமல் இருந்தோம் என்ற இழி வரலாறு எமக்கு வேண்டாம்.

ஐ.நாவை மட்டுமல்ல எமது அழிப்பில் பங்கெடுத்த எல்லோரையும் கேள்வி கேட்போம். கூண்டில் ஏற்றுவோம்.

> **க**டந்த நான்கு வருடங்களாக தமிழின அழிப்பின் முதன்மை குற்றவாளிகளாக ஐ.நாவை குறிப்பிட்டு பேசியும் எழுதியும் அதை ஒரு செயற்பொறிமுறையாக மாற்றவும் முயன்றும் வரும் ஒரு தரப்பாக இந்த பத்தி எழுதப்படுகிறது.
>
> ஈழத்தில் நடத்தப்பட்டது உண்மையில் மனித குலத்திற்கு எதிரான, அமைதிக்கெதிரான குற்றம. இதுவே இன அழிப்பாக மாறி யது. இது ஐ.நாவின் பூரண அறிவுடன் நடத்தப்பட்டது.

இதே மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தில்தான் "போர்க்கால நெறி பிறழ்வுகள்" (wartime abuses) என்று இனப்படுகொலையை சுருக்கியிருந்தார்கள். ஆனால் நடந்தது உண்மையில் மனித குலத்திற்கு எதிரான - அமைதிக்கெதிரான குற்றம். இதன் விளைவாக நடந்தது இன அழிப்பு. இங்கு எல்லோருமே குற்றவாளிகள்தான்.


### ஐ.நாவிற்கு சமாந்தரமான அமைப்பு ஒன்றின் தேவை

ஐ.நா மீதான வழக்குப் பதிவு என்பது ஒரு எதிர்ப்பு நடவடிக்கை. அதையும் மீறி ஐ.நாவும் மேற்குலகமும் மீண்டும் தகிடுதத்தங்களைச் செய்வார்களாயின், மக்கள் போராட்டம்தான் ஒரே தீர்வு.

எந்த உலகப்போர்களின் விளைவாக ஐ.நா தோற்றம் பெற்றதோ, அதே ஐ.நாவின் நீதியில் நம்பிக்கையற்ற மக்களையும் நாடுகளையும் அமைப்புக்களையும் ஒன்றிணைத்து ஐ.நாவிற்கு எதிராக போராடுவதுதான் ஒரே வழி.

இன்று ஈராக், ஆப்கானிஸ்தான், சிரியா என்று ஐ.நாவின் மீது உலகளவில் பலர் நம்பிக்கையிழந்து வரும் சூழலில் ஐ.நாவிற்கு எதிராக அல்லது அதற்கு சமாந்தரமாக ஒரு அமைப்பு உருவாக வேண்டும் என்ற கோசங்கள் வலுத்து வருகின்றன. நாம் அந்த போராட்டத்தின் முதல் அடியை எடுத்து வைப்போம்.

இது தமிழீழ விடுதலைப் போராட்டம் மட்டுமல்ல, ஒரு இனம் ஒடுக்கப்பட்ட- அடக்கப்பட்ட மக்கள் சார்ந்து உலக ஒழுங்கையே மாற்ற முற்பட்ட வரலாறு இது. எனவே, தற்போது ஐ.நாவிற்கு எதிரான எமது போராட்டமும் எமது விடுதலையை மட்டுமல்ல ஐ.நாவால் வஞ்சிக்கப்பட்ட பல இனக்குழுமங்களின் விடுதலையாக இருக்கும். அந்த பெருமிதத்தையும் கர்வத்தையும் எமதாக்குவோம்.



### ஐ.நாவிற்கு எதிரான போராட்டத்தில் தமிழகத்தின்பங்கு

இந்த வழக்கை தமிழகத்திலிருந்தும் தனியாக ஒன்று பதிவு செய்ய வேண்டும். ஏனென்றால், பிராந்திய பூகோள மாற்றங்களையும் புதிய உலக ஒழுங்கையும் கவனமாக உள்வாங்கிப் பார்க்கும் போது, எமது விடுதலையில் தமிழகத்தின் இடம் தவிர்க்கமுடியாத ஒரு பாத்திரத்தை வகிக்கிறது.

அத்தோடு தமிழின அழிப்பின் தொடர்ச்சி தமிழகத்தில் நிலம், இனம், மொழி என்று பல்வேறு தளங்களில் கருத்தியல் ரீதியாகவும், பண்பாட்டு தளத்திலும் பாதிப்பை உருவாக்கியிருக்கிறது.

2009 இன அழிப்பு தமிழகதிலும் அமைதிக்கு பங்கம் விளைவித்திருக்கிறது. பலர் தம்மை தாமே அழித்திருக்கிறார்கள். இன்று வரை தமிழின அழிப்பால் தமிழகத்தின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டே உள்ளது. இது தமிழ் நிலத்தில் நிகழ்த்தப்பட்ட அமைதிக்கெதிரான குற்றத்தின் தொடர்ச்சியாகவே பார்க்க முடியும்.

மே 18 இற்கு பிறகு தமிழீழ விடுதலையில் தாயகத்தையும் புலத்தையும் ஒப்பிடும் பொழுது தமிழகம் சில குழப்பங்களை நீக்கிப் பார்த்தால் தன்பங்கை செவ்வனே செய்வதாகவே கருதலாம்.

தமிழக சட்டமன்றத்தில் இதன் விளைவாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்திய மத்திய அரசு இன அழிப்பிற்கு துணை நின்றதுடன் தமிழக மக்களினது உளவியல்போக்கு குறித்தோ, சட்டமன்ற தீர்மானங்கள் குறித்தோ, அக்கறையற்று இன அழிப்பு அரசை காப்பாற்றுவது குறித்தே அக்கறைப்படுகிறது. இது பல வரலாற்று திருப்பங்களுக்கு வழிசமைத்திருக்கிறது.

தமிழக மக்கள் சார்பாக ஐ.நாவின் மீது ஏதேனும் அமைப்போ, அரசியல் கட்சியோ, வழக்கு தொடுக்கும் சமகாலத்தில் தமிழக தீர்மானங்களுக்கு மத்திய அரசு செவி சாய்க்காததால், தமிழகத்தின் அமைதி கருதி தமிழக அரசுகூட நேரடியாக ஒரு வழக்கை ஐ.நா மீது தொடுக்க முடியும் என்று எமக்கு சட்ட வல்லுனர்கள் சொல்கிறார்கள்.

இது ஒரு முக்கியமான செய்தி. இதன் வெற்றி தோல்விகள் சாதக பாதகங்களுக்கப்பால் அப்படி ஒரு முயற்சி சாத்தியமானால் அது ஒரு பெரும் வரலாற்றுப் புரட்சியாகவே இருக்கும். தமிழீழ பொதுவாக்கெடுப்பு என்பதன் முதல் அடியாக இது இருக்கும்.

எனவே, தமிழக அமைப்புக்கள், கட்சிகள் கருத்து வேறுபாடுகளை களைந்து இதன் சாத்தியங்கள் குறித்து ஆராய்ந்து தமிழக அரசுக்கு ஒரு உந்துதலைக் கொடுக்க வேண்டும்.


களம் புலம் தமிழகம் இணைந்ததுதான் தமிழீழ விடுதலை. எனவே, இந்த 3 தளங்களிலும் ஒன்றிணைக்கப்பட்ட மக்கள் போராட்டங்களும் அனைத்துலக மட்டத்திலான இந்த 3 தளங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்ட இராஜதந்திர நடவடிக்கைகளுமே எமக்கு நீதியைப் பெற்றுத்தரும்.

(முற்றும்)

-பரணி கிருஸ்ணரஜனி-

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 17.11.2013–15.12.2013



## துலாம்

**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**அதிர்ஷ்டத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கும் துலாம் இராசி நேயர்களே!**

**விரயங்கள் அதிகரிக்கும் மாதம்!**

## ஆலய வழிபாடுகளில் ஆர்வம் காட்டி உள்ளூர மகிழ்வீர்கள்

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது சந்திரன் சப்தம ஸ்தானத்தில் உலா வருகிறார். கேதுவோடு இணைந்து செயற்படுவதால் பயணங்கள் அதிகரிக்கும். கோவில் வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள். கூட இருப்பவர்களால் பிரச்சினைகள் அதிரிக்கலாம். அவற்றில் இருந்து விடுபட இடமாற்றம் செய்யலாமா? ஊர் மாற்றம் செய்யலாமா? என்று சிந்திப்பீர்கள். உச்ச சனியின் ஆதிக்கம் உங்கள் இராசியில் இருப்பதால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை.

உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்புக் கிரகமாகும். எனவே, ஏழரைச் சனியின், ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடந்தால்கூட மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகச் செய்துவிடும். அந்த மந்தச்சனி மகத்துவம் தரவேண்டுமானால் அவரை நாம் கொண்டாட வேண்டும். சனிக்கிழமை தோறும் விரதமிருந்து அவரை வழிபாடு செய்யலாம். அன்றைய தினம் இயன்றவரை அன்ன தானம் செய்து சிறப்பிக்கலாம்.

விரயாதிபதி புதன் உங்கள் இராசியில் கூடி இருப்பதால் விரயங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியத்திற்காகவும் விரயம் ஏற்படலாம். அடுத்தவர்களுக்கு கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தின் காரணமாகவும் விரயம் ஏற்படலாம். இதுபோன்ற காலங்களில் வீட்டில் சுபகாரியங்களை மேற்கொண்டு சுபச் செலவுகளை செய்வது நல்லது.

வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கலாம். செய்தொழிலில் இடையூறுகள் வந்து அலைமோதலாம். இருந்தாலும் குரு வக்ரம் பெற்று உங்கள் இராசியைப் பார்ப்பதால் தடைகள் அகலும். தன வரவு திருப்திகரமாக இருக்கும். இருந்தாலும், வந்த மறுநிமிடமே செலவாகிவிடும் சூழ்நிலையும உருவாகும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

புதன் நவம்பர் 28 ஆம் திகதி விருச்சிக இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிக்குப் புதன் 9,12 க்கு அதிபதி ஆவார். விரயாதிபதியான புதன் தனஸ்தானத்தில் சஞ்சரிக்கும்பொழுது செலவு நடைகள்கூடும். மதிப்பையும் மரியாதையையும் தக்கவைத்துக்கொள்ள அரும்பாடுபடுவீர்கள்.

**கன்னிச்செவ்வாயின் சஞ்சாரம்!**


நவம்பர் 30 ஆம் திகதி கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். தனாதிபதி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் நேரமிது. எனவே, இக்காலத்தில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து செய்வது நல்லது. பிறரை நம்பி கொடுத்த தொகை வராமல் இழுபறியில் இருக்கும். இக்காலத்தில் சண்டை சச்சரவுகள் மேலோங்காமல் இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**மகரச் சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசம்பர் 3 ஆம் திகதி மகர இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இந்த நேரம் உங்களுக்கு ஒரு இனிய நேரமாகும். இராசிநாதனையும் அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்ரன் 4 இல் சஞ்சரிக்கும் பொழுது வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தாய்வழி ஆதரவு பெருகும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

இம்மாதம் இனிய மாதமாக அமைய அஷ்டமியன்று வைரவர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அதுமட்டுமல்லாமல் வள்ளிமணாளப் பெருமானையும் வழிபாடு செய்யுங்கள். சனி ஆதிக்கம் உங்களுக்கு நடப்பதால் சனிப்பிரதோஷத்தன்று நந்தியெம்பெருமான் வழிபாட்டையும் நீங்கள் மேற்கொள்ளுங்கள்.

## சிவல்புரி சிங்காரம்



## விருச்சிகம்

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**மற்றவர்களுக்கு ஆலோசனைகளைக் கூறும் விருச்சிக இராசிநேயர்களே!**

**சூரிய பலத்தால் சுகங்கள் கூடும்!**

## இந்த பரிவர்த்தனை யோகம் நல்ல பலன்களை வழங்கும் யோகமாகும்

கார்த்திகை மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசியில் சூரியன் சஞ்சரிக்கிறார். இராசிநாதன் செவ்வாய் 10 ஆம் இடத்தில் சூரியன் வீட்டில் சஞ்சரிக்கின்றார். எனவே, இந்த பரிவர்த்தனை யோகம் நல்ல பலன்களை வழங்கும் யோகமாகும். செல்வநிலை உயரும். வையகம்போற்றும் விதத்தில் வாழ்க்கை அமையும். அதே நேரத்தில் ஏழரைச் சனியின் ஆதிக்கம் உங்களுக்கு நடக்கிறது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

தனபஞ்சமாதிபதியான குரு வக்ர இயக்கத்தில் இருக்கிறார். சனி விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, வரவைக் காட்டிலும் செலவு கொஞ்சம் கூடுதலாகத்தான் இருக்கும். இருந்தாலும் பணம் வந்துகொண்டே இருக்கும். 2 இல் சுக்ரன் சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நிறையவே நடைபெறலாம். பெண்களால் பெருமை சேரும்.

பரிவர்த்தனை யோக அடிப்படையில் சூரியன், செவ்வாய் சஞ்சரிப்பதால் அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புக்களும் பதவிகளும் கிடைக்கலாம். அலுவலகத்தில் பணிபுரிந்தால்கூட அதிகாரத்துவ யோகமும், தலைமைப் பொறுப்பும் தானாகவே வந்து சேரும். வெற்றிச்செய்திகள் வீடுதேடிவர முருகப்பெருமானை வழிபாடு செய்யுங்கள். அஷ்டமியன்று காலபைரவர் வழிபாட்டை மேற்கொண்டால் அனைத்துலக காரியங்களிலும்வெற்றி கிடைக்கும்.

**விருச்சிக புதனின் சங்சாரம்!**

நவம்பர் 28 ஆம் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். இளைய சகோதர வழியில் இனிய பலன்கள் வந்து சேரலாம். கூடுதல் லாபம் வருகின்ற நேரத்தில் புதிய தொழில் தொடங்கலாமா? என்ற சிந்தனை மேலோங்கும்.

**கன்னி இராசியில் செவ்வாயின் சஞ்சாரம்!**

நவம்பர் 30 ஆம் திகதி கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு எதிர்பார்த்தபடியே வந்து சேரும். என்றைக்கோ வாங்கிப்போட்ட இடம் இப்பொழுது நல்ல விலைக்கு விற்று ஆதாயம் கிடைக்கும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

மகர இராசியில் டிசம்பர் 30 ஆம் திகதி சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். உங்கள் இராசிக்கு 7,12 க்கு அதிபதியான சுக்ரன் முன்னேற்றம் தரும் 3 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது சுகபோகச் செலவுகள் அதிகரிக்கும். பழைய வாகனங்களை வைத்திருப்போர், அதைக் கொடுத்துப் புதிய வாகனங்களை வாங்கும் முயற்சிகளில் ஈடுபடுவர்.

பிரபலங்களின் நட்பால் பெருமை காண்பீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். அந்நிய மாநிலம் அல்லது அந்நிய தேசத்திலிருந்து வரும் தகவல் தொழிலுக்கு உறுதுணையாக இருக்கும். வாழ்க்கைத்துணை வழியே வரவு வருவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இம்மாதம் இனிய மாதமாக அமைய சனிக்கிழமை அன்று ஆனை முகப்பெருமானையும் முருகப்பெருமானையும் வழிபாடு செய்யுங்கள். பிரதோஷ நாளில் நந்தியெம்பெருமான் உமாமகேஸ்வரரை வழிபட்டால் நலம் யாவும் வீடுவந்து சேரும்.

(தொடரும்)

## ஆந்.லொறி-கார் விபத்து; ஒரே குடும்பத்தில் 8 பேர் பரிதாப சாவு

(சித்தூர்)

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் வாகன விபத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலையில் ஆந்திராவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

பண்டிகையில் பங்கேற்க காரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 2பெண்கள், 2 குழந்தைகள் உள்ளிட்ட 11 பேர் புறப்பட்டனர். நெல்லூர் மாவட்டம் வெங்கடாஜல புரம் டோல்கேட் அருகே கார் சென்று கொண்டிருந்தது. அப்போது நெல்லூரிலிருந்து கூடூர் நோக்கி எதிரே வந்த லொறி மீது கார் பயங்கரமாக மோதியது. இதில் லொறியின் அடியில் கார் சிக்கி நொறுக்கியது.

இந்த கோர விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். படுகாயமடைந்த 4 பேர் அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி ஒருவர் உயிரிழந்தார். மற்றைய 3 பேருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது. (2)

# இலங்கை-தமிழக மீனவர்களின் விவகாரம்; டிசெம்பர் 12 இல் பேச்சுவார்த்தை

(சென்னை)

**தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்காக தமிழக-இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தை எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறும் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.**

புதுவையில் செய்தியாளர்களிடம் பேசிய போதே மத்திய அமைச்சர் நாராயணசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

புதுவை மற்றும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் தொடர்ந்து சிறைபிடிப்பதை தடுக்க மத்திய அரசு, தமிழகம் மற்றும் இலங்கை மீனவ பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் பேச்சுவார்த்தையை நடத்த வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கேட்டுக்கொண்டார்.

மேலும் தமிழக மற்றும் புதுவை மீனவர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கையும், மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித்தையும் சந்தித்து இதே கோரிக்கையை வலியுறுத்தியுமுள்ளனர்.

அதேவேளை, இலங்கை பிரச்சினை தொடர்பில் தமிழகத்தில் எவரும் அரசியல் செய்ய வேண்டாமென்று கேட்டு கொள்கிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, தமிழகத்தில் உள்ள மத்திய அமைச்சர்கள், காங்கிரஸ் தலைவர்கள், தி.மு.க. தலைவர் கலைஞர் ஆகியோர் கேட்டுக் கொண்டதன் பேரில் இலங்கையில் நடைபெற்று வரும் பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்ளவில்லை. தமிழர்களின் உணர்வுகளை புரிந்துகொண்டு பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்ளாத பிரதமர் மன்மோகன்சிங்குக்கு தமிழர்கள் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

பொதுநலவாய மாநாட்டில் வெளியுறவுதுறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கலந்து கொண்டிருக்க கூடாது என்று சில அரசியல் கட்சிகள் கூறுகின்றன. ஆனால் இலங்கை நமது அயல் நாடு. மத்திய அரசின் சார்பில் இலங்கையில் உள்ள தமிழர்களின் புனர்வாழ்வுக்காக 10 ஆயிரம் கோடி ரூபா நிதியை நாம் வழங்கி உள்ளோம்.

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் மக்களுக்கென 50 ஆயிரம் வீடுகள் கட்டி கொடுக்கவும், 500 மெகாவோட் மின்சாரம் தயாரிப்பதற்கும், பாடசாலை மற்றும் கல்லூரியை கட்டுவதற்கும் இந்திய அரசு இலங்கைக்கு உதவி செய்து வருகிறது. அதற்கான வேலைகளும் அங்கு நடைபெற்று வருகின்றன.

இலங்கை தமிழர்களுக்கு அதிகாரம் கிடைக்கவும், தமிழக புதுவை பகுதி மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து சிறைபிடிக்கப்படுவதைத் தடுக்கவும், இலங்கை தமிழர்கள் நலவாழ்வு பெறவும் பொதுநலவாய மாநாட்டில் மத்திய அமைச்சர் சல்மான் குர்ஷித் கலந்து கொண்டால் மட்டுமே தீர்வு கிடைக்கும்.

இலங்கை வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் இலங்கை பிரச்சினையில் எவரும் அரசியல் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

அதுபோல் இந்த விவகாரத்தை யிட்டு தமிழகததிலும் எவரும் அரசியல் செய்ய வேண்டாமென்று கேட்டு கொள்கிறேன் என்றார்.

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை அரசிடம் பேசியுள்ளார். இலங்கை அரசும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளது.

எனவே இருநாட்டு மீனவர்களின் பேச்சுவார்த்தைக்கும் மத்திய அரசு ஏற்பாடு செய்து வருகிறது. இந்த பேச்சுவார்த்தை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2 ஆவது வாரத்தில் தமிழகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில் மீனவர்கள் மீன்பிடிக்கும் எல்லை உட்பட பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேசப்படும். இந்த பேச்சுவார்த்தை மூலம் மீனவர்களின் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (2)

## பாரதச் செய்தி



கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்ட பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்து கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம்.

# ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து விவாதிக்கவே சல்மான் குர்ஷித் இலங்கை பயணித்தார்

## மத்திய அமைச்சர் வாசன் தெரிவிப்பு

தமிழர்களின் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காகவே வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை பயணித்தார் என மத்திய அமைச்சர் ஜீ.கே. வாசன் கூறினார்.

பெங்களூரில் நிருபர்களுக்கு அவர் அளிததபேட்டியில் கூறியதாவது,

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொள்ளவில்லை. 8 கோடி தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து அவர் இந்த முடிவு எடுத்துள்ளார்.

அதேவேளை இலங்கை தமிழ் மக்களுக்கு முன்னேற்றம், வளர்ச்சி, பாதுகாப்பு, சமஉரிமை ஆகியவை கிடைக்கச் செய்வதில் மத்திய அரசு அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது.

இலங்கை தமிழர்களின் மேம்பாட்டுக்காக கடந்த 5 ஆண்டுகளில் இந்திய அரசு 45 ஆயிரம் கோடி ரூபா செலவில் பல்வேறு நலத்திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. அங்கு வீடு, சுகாதாரம், மருத்துவமனைகள், வீதிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.




இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை கிடைக்க வகை செய்யும் 13ஆவது சட்டத்திருத்தத்தை அமுல்படுத்த தேவையான நடவடிக்கையை மத்திய அரசு எடுத்துள்ளது. இலங்கை தமிழ் மக்களின் நலன் கருதி இந்த நடவடிக்கையை மத்திய அரசு விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் தமிழகத்தை சேர்ந்த மீனவர்களை பிரதமர் மன்மோகன்சிங் சமீபத்தில் சந்தித்து பேசினார். அவர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று பிரதமர் உறுதி அளித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காகவும், அதற்குத்தீர்வு காண்பதற்காகவும் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை சென்றுள்ளார். அங்கு நடைபெறும் பொதுநலவாய மாநாட்டிலும் அவர் கலந்து கொண்டுள்ளார். அங்கு பல்வேறு தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளை அவர் சந்தித்து பேசியிருககிறார். இலங்கை அரசுடன் தமிழர்களின் பிரச்சினை குறித்தும் அவர் விவாதிப்பார் என ஜி.கே.வாசன் கூறினார். (2)

# "விக்ரமாதித்யா" இந்திய கடற்படையில் இணைவு

(மொஸ்கோ)



விமானம் தாங்கி போர்க் கப்பலான, "ஐ.என்.எஸ்., விக்ரமாதித்யா" இந்திய கடற்படையில் நேற்றுமுன்தினம் இணைகப்பட்டது.

"நட்பு நாடு" என்ற அடிப்படையிலும், நம் இராணுவத்துக்கு தேவையான, பெரும்பாலான ஆயுதங்களை, ரஷ்யாவிடம் இருந்து வாங்கியதாலும், அந்த கப்பலை, இந்தியாவுக்கு, இலவசமாக வழங்குவதாக, ரஷ்யா அறிவித்தது. இதன்படி, அந்த கப்பலை, இந்தியாவுக்கு ஏற்ப மாற்றியமைக்கவும், அதற்கான செலவுகளை இந்தியா ஏற்பது எனவும் முடிவானது.

**ரஷ்யாவில் அமைச்சர**

இந்த கப்பலுக்கு, "விக்ரமாதித்யா" என, பெயர் சூட்டப்பட்டது. இதை, இந்திய கடற்படையில் சேர்த்து, இந்தியாவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக, இராணுவ அமைச்சர், அந்தோணி மற்றும் கடற்படை உயரதிகாரிகள், ரஷ்யா சென்றனர்.

கப்பலை, இந்திய இராணுவத்தில் முறைப்படி சேர்க்கும் நிகழ்ச்சி, ரஷ்யாவின் செவ்மாஷ் கப்பல் கட்டும் தளத்தில் நேற்றுமுன்தினம் நடந்தது. ரஷ்யா துணை பிரதமர், டிமிட்ரி ரொகாஜின், இந்த கப்பலை, இந்திய கடற்படையிடம் முறைப்படி ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில், கையெழுத்திட்டு, இராணுவ அமைச்சர், அந்தோணியிடம், கொடுத்தார்.

இதைத் தொடர்ந்து, கப்பலில் பறந்த, ரஷ்ய தேசியக் கொடி இறக்கப்பட்டு, இந்திய தேசியக் கொடி ஏற்றப்பட்டது. பாரம்பரிய முறைப்படி, கப்பலின் நான்கு பக்கமும், தேங்காய்கள் உடைக்கப்பட்டன.

இதன் பின், பாதுகாப்பு கப்பல்கள் புடை சூழ, விக்ரமாதித்யா கப்பல், இந்தியாவுக்கு புறப்படும். இரண்டு மாத பயணத்துக்கு பின், கர்நாடகா மாநிலம், கார்வாரில் உள்ள, கடற்படை தளத்துக்கு இந்த கப்பல் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கப்பல் கடற்படையில் சேர்க்கப்படடுள்ளதன் மூலம இந்திய கடற்படையின் பலம் மேலும் அதிகரித்துள்ளது.

இந்தக் கப்பலில் இடம் பெறும் மிக் 29 கே அதிநவீன போர் விமானம் 700 கடல்மைல் தூரம் சென்று எதிரி கப்பலைகளை தாக்கக்கூடியது. மேலும் நீர்மூழ்கி எதிர்ப்பு ஏவு கணைகள், வெடிகுண்டுகள், ரொக்கெட்டுகள், கடல் கண்காணிப்பு உலங்குவானூர்திகள் போன்றவை இடம்பெறுகின்றமை சிறப்பம்சமாகக் கருதப்படுகிறது. (2)





இந்திய தெருவோரக் கடையில் வடை,சட்னியை ருசித்த பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன்....

# பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்ற மத்திய அரசுக்கு கண்டனம்

## டெசோ கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்



இலங்கை பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்ற மத்திய அரசிற்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டு டெசோ கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. டெசோவின் கூட்டம் தி.மு.க. தலைவர் கலைஞர் தலைமையில் அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இலங்கை தமிழர் பிரச்சினையில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்தும், இலங்கை தமிழர் நலன் காக்க மத்திய அரசுக்கு எப்படி அழுத்தம் கொடுக்கலாம் என்பது பற்றியும் இதன்போது ஆலோசிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதியும், டெசோ அமைப்பும் தமிழகத்தின் அனைத்து கட்சிகளும் மத்திய அரசை பலமுறை வலியுறுத்திய பின்னரும் தமிழர்களின் ஒருமித்த உணர்வுகளை புறக்கணித்து விட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமையில் ஒரு குழு இலங்கை சென்றமை வெந்த புண்ணில் வேல்பாய்ச்சுவது போல் ஆகிவிட்டது.

இலங்கை ஜனாதிபதிக்கு பிரித்தானிய பிரதமர் கமரூனும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்தியா பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொண்டது தமிழ் இனத்தை அழிக்க முயலும் இலங்கை அரசிற்கு தோள் கொடுத்து தூக்கி நிறுத்தும் நடவடிக்கை என்று டெசோ கருதுகிறது. இனியாவது மத்திய அரசு இலங்கை மனித உரிமை மீறல் போர்க் குற்றம் குறித்து சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

இலங்கை வடக்கு கிழக்கு மாகாண அரசுகளுக்கு அனைத்து அதிகாரமும் கிடைக்க வேண்டும். முள்ளிவாய்க்கால் முற்றத்தை இடித்த தமிழக அரசுக்கு கண்டனம் என்பன உட்பட 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின், திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன், திராவிடர் இயக்க தமிழர் பேரவை பொதுச்செயலாளர் சுப.வீரபாண்டியன், முன்னாள் அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் உள்ளிட்டோர் இந்த கூட்டத்தில் பங்கேற்றனர். (செ-2)

# சம்பள உயர்வு கோரி 20ம் திகதி ஆர்ப்பாட்டம்

வரவு செலவுத் திட்டத்தில் அரச, தனியார் துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கோரி அரச தனியார் துறை தொழிற்சங்கங்கள் எதிர்வரும் 20ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளதாக அரச தனியார் துறை தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டி ஏற்பாட்டாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

வாழ்க்கை செலவு அதிகரிப்பால் அரச தனியார் ஊழியர்கள் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாது திண்டாடுகின்றனர். எனவே 21ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டி தெரிவித்துள்ளது. (செ-11)

# செவ்வாய்க்கிரகத்தை நெருங்கும் விண்கலம்

செவ்வாய்க்கிரகத்தை மங்கல்யான் விண்கலம் நெருங்கி வருவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

எதிர்வரும் முதலாம் திகதி திட்டமிட்டபடி அடுத்த கட்டமாக செவ்வாயின் நீள் வட்டப் பாதையில் விண்கலத்தை செலுத்தும் முயற்சியை விஞ்ஞானிகள் மேற்கொள்வர். இதன்படி 2014 ஆம் ஆண்டு செப்டெம்பரில் இவ் விண்கலம் செவ்வாய் வட்டப்பாதையில் நுழைந்து தன் ஆய்வை மேற்கொள்ளும் என்று விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (செ-2)

## வடமராட்சி கிழக்கில்

# சட்ட விரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் சட்ட விரோதமான கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளதாக சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பிரதேசத்திலுள்ள மருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, முள்ளியான் நித்தியவெட்டை, போக்கறப்பு, வண்ணாங்குளம், கேவில் ஆகிய கிராமங்களில் சட்ட விரோதமான கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறாக உற்பத்தி செய்யப்படுகின்ற கசிப்பு குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுவதனால் அங்குள்ள இளம் சமூகத்தினர் உட்பட அனைவரும் இதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை பொலிஸார் கைது செய்து நீதிமன்றம் வரையும் கொண்டு சென்று தண்டனை பெற்றுக் கொடுக்கும் சம்பவங்கள் பல முன்னரும் இங்கு இடம்பெற்றுள்ளன. இருந்த போதிலும் தண்டனை பெற்றவர்கள் மீண்டும் சட்டவிரோத கசிப்பு தொழிலில் ஈடுபட்டு வருவதாக மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியை முற்றிலுமாக ஒழிப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-9-64)

# முதலியார் கோவிலடி வீதியை புனரமைத்துத்தரக் கோரிக்கை

(பருத்தித்துறை)

கரவெட்டி மேற்கு முதலியார் கோவிலடி வீதி மோசமாக சேதமடைந்திருப்பதாக மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுமார் 200 மீற்றர் தூரமுடைய இவ் வீதி அமைந்துள்ள சுற்றாடலில் 70க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இப் பிரதேச மக்கள் வைத்தியசாலை, பாடசாலை, நெல்லியடி நகரம் போன்றவற்றுக்கு செல்வதற்கு இப் பாதையையே பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு உரியவர்களிடம் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-9-10)


## முதலாம் ஆண்டு திவச அழைப்பிதழ்

அமரர் சின்னையா மகாலிங்கம்



ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
ஆறிடவில்லை எம் துயரம்
அன்பின் திருவுருவாய்
பாசத்தின் அரவணைப்பாய்
அமைதியின் உறைவிடமாய்
அவனியில் வாழ்ந்து
எமக்கு வழிகாட்டிய தெய்வமே
எம் உள்ளங்களில் என்றென்றும்
உம் நினைவுகள்...

(4496)

29.11.2012 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அவர்களின் முதலாம் ஆண்டு திவச நிகழ்வுகள் 18.11.2013 திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தம்புவத்தை,
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

குடும்பத்தினர்.



## 45ம் நாள் நினைவஞ்சலி



அமரர் சோகேஸ்வரன் கஜேந்தன்

தோற்றம்
19
02
1989

மறைவு
05
10
2013

நீர் பறந்து போனாலும் உன்னை
மறந்த நாள் இல்லை
உன் நினைவில் தான் இன்றும்
எம் எண்ணச் சிறகுகள் பறக்கின்றது
உம் வழிகாட்டலில் தான் இன்று
எம் வாழ்க்கை சிறக்கின்றது
அறிவினால் வழிகாட்டி அரவணைத்தீரே
ஆண்டவன் நிழல்நாடி அமைதியாய் சென்றீரே
நாட்கள் நகர்ந்தாலும்
நாட்காட்டிகள் கிழிந்தாலும்
உன் நினைவுகள் என்றும்
எம்மை விட்டு அழியாது

அழியா நினைவுகளோடு A.M.A. கல்வி நிலைய
ஆசிரியர்கள், மாணவர்கள், அளவெட்டி.

(4499)

# மோடி-ஜேர்மன் தூதர் சந்திப்பு

(அகமதாபாத்)

இந்தியாவுக்கான ஜேர்மன் தூதர் மைக்கேல் ஸ்டெய்னர், குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

குஜராத் மற்றும் ஜேர்மனிக்கு இடையேயான நல்லுறவை வலுப்படுத்தும் நோக்கில், இச் சந்திப்பு நிகழ்ந்ததாக அந்நாட்டு தூதரகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத்தில் மூன்று நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஸ்டெய்னர், கடந்த வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறுகையில்,

நரேந்திர மோடிய்யை வெளிநாடுகள் புறக்கணிக்கும் நிலை முடிவுக்கு வருவதை அவருக்கு அளிக்கும் ஆதரவாகக் கருதக்கூடாது. இந்தியாவின் ஜனநாயகத்திற்கு அளிக்கும் கௌரவமாகவே அதைக் கருத வேண்டும்.

இந்தியா ஒரு மிகப் பெரிய ஜனநாயக நாடு. இந்த நாட்டு மக்கள், நரேந்திர மோடியை பிரதமராக தேர்ந்தெடுத்தால், அவர்களின் முடிவுக்கு மதிப்பளித்து மோடியை ஆதரிப்போம் என்று தெரிவித்தார். (2)

## கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற வடமாகாண மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மட்டத்தில் நடத்துமாறு வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அம் மாணவர்களுக்கான நற்சான்றிதழ்களை வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். (செ-7)

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் தொழிலுரிமைத்துவமும் சிறு வணிக முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு 18 வயதைப் பூர்த்தி செய்த க.பொ.த.(சா/த) பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்த அனைவரும் விண்ணப்பிக்க முடியும். இக் கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவங்களை 04.12.2013 ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ-11)

# சனல் -4 ஊடகவியலாளர்களை சிறிகொத்தாவிற்கு அழைத்தது யார்?

## அரசின் சூழ்ச்சி அம்பலம் என்கிறார் சஜித்

(கொழும்பு)

சனல்4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்களை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திற்கு அழைத்து வந்தமையானது, அந்த கட்சியைத் தோற்கடிக்கும் அரசாங்கத்தின் சூழ்ச்சித் திட்டம் என அதன் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



ஹொரணையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்களை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திற்கு அழைத்து வந்த, அரசாங்கத்திறகு சேவகம்செய்யும் அந்த நபர்யார என்பதைக் கண்டறிய வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கால்களுக்கு விலங்கு போடும் அரசாங்கத்திற்கு சேவகம் செய்யும் நபர்கள் பலர் இருக்கின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்த அரசாங்கம் பொய்யான குழிகளைத் தோண்டி வருகிறது.

ஊடக சந்திப்பொன்றுக்காக அண்மையில் சனல் 4 தொலைக்காட்சியை சிறிகொத்தாவிற்கு அழைதது வந்துள்ளனர்.

ஆனால் அந்த தொலைககாட்சியை சிறிகொத்தாவிற்கு அழைத்து வந்ததன் மூலம் அரசாங்க கட்சியை வெற்றி பெறச்செய்ய முடியுமா?.

அவர்களை அழைத்து வந்து அரசாங்கத்திற்கு சேவகம் செய்பவர்கள் யாவர் என்பதை கண்டுபிடிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடிக்கும் அரசாங்கத்தின் சூழ்ச்சியின் ஒரு அங்கமாகவே சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்கள் சிறிகொத்தாவிற்கு அழைத்து வரப்பட்டமை அமைகிறது என்றார் சஜித். (செ-11)




பி.சி.எ.எஸ். கம்பஸ் மாணவர்களும் யாழ்.போதனா வைத்தியசாலையின் குருதிவங்கியும் இணைந்து நேற்று முன்தினம் நடத்திய இரத்ததான நிகழ்வின் போது...

# மாவீரர் நினைவாகவும் மரம் நடுவோம்!

## தேசத்தின் நிழல் நிகழ்ச்சியில் ஐங்கரநேசன்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ச் சமூகம் மரங்களை வழிப்பட்ட ஒரு இனம். அதன் தொடர்ச்சியாகவே இன்று எமது ஆலயங்கள் தல விருட்சங்களைக் கொண்டிருக்கின்றன.

பிறந்தநாள் நினைவாக மரங்களை நடுகின்ற நாம் அதேசமயம் மறைந்த உறவுகளின் நினைவாகவும் மரங்களை நடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றோம்.

அந்த வகையில் தேசிய மர நடுகை திட்டத்தில் இணைந்து கொண்டிருக்கும் நாம் மாவீரர் தினத்தன்றும் மரங்களை நடுவோம்.

அரசாங்கத்துக்கு பயங்கரவாதிகளாக தெரிபவர்கள், எமக்கு மாவீரர்கள். அவர்கள் எங்களுடைய இரத்த உறவுகள். இதனைப் படையினர் புரிந்து கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண விவசாய கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, சுற்றுச் சூழல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீண்டும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கரடிப் போக்குச் சந்தியில் இரணைமடுக்குள இடது கரை வாய்க்காலின் இரு மருங்கிலும் 'தேசத்தின் நிழல்' என்னும் தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டம் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் பங்கேற்றுக் கொண்டிருக்கின்ற 'தேசத்தின் நிழல்' என்னும் தேசிய மரநடுகை நிகழ்ச்சி இன்று நாடு முழுவதும் அரச திணைக்களங்களினால் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு தேசிய மர நடுகை திட்டமாகும்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாள் நினைவாகவும் அவரது பதவியேற்பு நினைவாகவும் கடந்த 2010 ஆம் ஆண்டில் இருந்து இம் மரநடுகை திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்த் தேசிய விடுதலையை முழுமூச்சாக நிராகரிக்கின்ற ஒரு ஜனாதிபதியின் நினைவாக நடைபெறும் ஒரு நிகழ்ச்சியில் தமிழ்த் தேசியத்தில் தீவிர பற்றுறுதி கொண்ட நான் கலந்து கொண்டிருக்கிறேன்.

அதுவும் யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கு மக்கள் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டிருக்கும் தங்கள் நிலங்களில் மீளக்குடியேற அனுமதி கோரியும் காணாமற் போனவர்களைக் கண்டுபிடித்துத் தரக் கோரியும் அவர்களது உறவுகள் மிகவும் உணர்ச்சி பூர்வமான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் தற்போதைய நிலையில், நான் இம் மரநடுகை நிகழ்ச்சியில் இராணுவத்தினரோடு சேர்ந்து கலந்து கொண்டிருக்கிறேனெனில் அதற்குக் காரணம் சுற்றுச் சூழலியலாளர்களுக்கு இனம், மதம், மொழி போன்ற பேதங்கள் இல்லை என்பதையும் சூழலியல் நடவடிக்கைகளுக்கு தேசிய எல்லைகள் கிடையா என்பதையும் தெரியப்படுத்தத்தான் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# இராணுவ முகாமொன்று அகற்றப்பட்டது

(பருத்தித்துறை)

வடமராட்சி அல்வாய் நாவலடி சந்திப் பகுதியில் மேல்மாடி வீடொன்றிலிருந்த இராணுவ முகாம் அகற்றப்பட்டுள்ளது.

யுத்தம் நடைபெற்ற போது, வடமராட்சியின் பல இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன.

அக்கால கட்டத்தில் நாவலடி சந்திப் பகுதியிலிருந்த தனியார் வீடொன்றை இராணுவத்தினர் முகாமாக மாற்றி சுமார் 25 வருடங்களுக்கு மேலாக அவ் வீட்டில் நிலை கொண்டிருந்தனர்.

இந்நிலையில், கடந்த வாரம் அவ் வீட்டிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி முகாமை அகற்றியுள்ளனர்.

இவ்வாறாக வெளியேறிய இராணுவம் திக்கம் பகுதியிலுள்ள இராணுவ முகாமோடு இணைக்கப்பட்டுள்ளது.

இராணுவ முகாமாக இருந்த வீட்டை இதுவரை வீட்டின் உரிமையாளர்கள் பொறுப்பேற்கவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (செ-9-10)

# பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்றதால் மன்னிப்பு கோரினார் கொழும்பு மேயர்

(கொழும்பு)

கட்சியின் தலைமைக்கு மாறாக பொதுநலவாய நாடுகளின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றமைக்காக கொழும்பு மேயர் ஏ.ஜே.எம். முஸம்மில் மன்னிப்பு கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விகரமசிங்கவின் வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்தை மையமாகக் கொண்டு, பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை முழுமையாக புறக்கணிக்க ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்திருந்தது.

எனினும் மேயர் முஸம்மில் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றிருந்தார். இது ஐக்கிய தேசியக்கட்சிக்குள் முரண்பாட்டு நிலையை தோற்றுவித்தது.

இதனையடுத்து மன்னிப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள முஸம்மில், கொழும்பு மேயர் என்ற வகையில் அந்த நிகழ்வில் கலந்து கொள்ள, முன்னதாகவே கட்சிதலைமை, தமககு அனுமதி வழங்கியிருந்த தாகவும் ஆனால், அதன் பின்னரான கட்சியின் பிந்திய முடிவை தாம் தெரிந்துகொள்ள முடியவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-2)

ஒரு ஆட்டுக் கூட்டத்திற்கு சிங்கம் தலைமை வகிக்கலாம். ஆனால் சிங்கக் கூட்டத்திற்கு ஆடு தலைமை வகிக்கக் கூடாது. - *டானியல் டிஃபோ*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முதல்வர் விக்னேஸ்வரனுக்கு ஓர் அவசர மடல்

மரியாதைக்குரிய வடக்குமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு அன்பு வணக்கம்.

தமிழ் அரசியல் தலைமையின் இன்றைய நிலை குறித்து, அவசர கடிதத்தை எழுத வேண்டிய தேவை எழுந்துள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மன்னிக்க வேண்டும் தமிழரசுக்கட்சி, தமிழ் மக்களின் அவல நிலை பற்றி இம்மியும் கவனத்தில் கொள்ளாமல், பிரிட்டிஷ் பிரதமரை சந்தித்துக் கதைப்பது அதி கௌரவத்தை தமக்கு ஏற்படுத்தும் என்ற மனநிலையுடன் நடந்து கொண்டிருக்கிறது என்பது தெளிவாகின்றது.

இதன்காரணமாகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் மீது தமிழ் மக்கள் ஆத்திரமும் கோபமும் அடைந்தனர்.

இதிலிருந்து நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள முடியும் அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரை வடபுலத்து தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதாகும். அதே நேரம் சம்பந்தரிடமும் யாழ்ப்பாணத்தார் என்ற துவேச உணர்விருப்பதையும் காணமுடியும்.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் பிரிட்டிஷ் பிரதமரை இரா.சம்பந்தர், எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வடக்கின் முதலமைச்சராகிய தாங்கள் என மூவரும் சந்தித்திருந்தீர்கள்.

உண்மையைச் சொன்னால் சம்பந்தர் கீறிய கோட்டை தாண்டாதவர் சுமந்திரன்.

தனக்கு மிகவும் நம்பிக்கையானவர் என்ற அடிப்படையிலேயே சுமந்திரனை சம்பந்தர் தனக்கு பக்கத்தில் வைத்திருக்கிறார்.

அதேநேரம் இந்த இருவரும் யாழ்ப்பாணத்தாரின் இழப்புகளை, துயரங்களை தெரிந்து கொண்டவர்களோ! அல்லது அதுபற்றி கவலை கொள்பவர்களோ! அல்ல.

சுருங்கக் கூறின் வடபுலத்து தமிழ் மக்களின் இழப்புகள் தொடர்பில் பிரிட்டிஷ் பிரதமரிடம் இருந்த கவலை கூட, இவர்களிடம் இருந்திருக்க மாட்டாது.

இப்போது கமரூனை சந்தித்த மூவரில் நீங்கள் நேர்மையுடனும் விசுவாசத்துடனும் நடந்து கொள்ளக் கூடியவர். ஆனால் இந்த இடத்தில் சம்பந்தரை மீறி, காணாமல் போன உறவுகள் கண்ணீர்விட்டு அழும் செய்தியை பிரிட்டிஷ் பிரதமரிடம் தங்களால் எடுத்துக் கூற முடிந்திருக்கும் என்று நாம் நம்பவில்லை.

எனவே தான் இந்த அவசர கடிதத்தை எழுதுகின்றோம். தமிழ் மக்களுக்காக ஒரு நேர்மையான அரசியல் தலைமையை நீங்கள் ஆரம்பிக்கவேண்டும். அந்தத் தகைமையும் தகுதிப்பாடும் தங்களிடமே இருக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் ஆதரவும் அனுதாபமும் தமிழ்மக்களை நோக்கியதாக இருக்கும்போது அது தமிழ் மக்களின் விடிவுக்கு நிச்சயம் வழிகோலும்.

ஆனாலும் ஆசாபூதிகளைக் கொண்ட தமிழ் அரசியல் தலைமைகள் இருக்கும் வரை தமிழ் மக்களின் விடிவு என்பது நடக்காத காரியம்.

ஆகையால், மரியாதைக்குரிய வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களே! உங்களின் தலைமையில்; மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறிதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் , பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் போன்றவர்களையும் இன்னும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலும் அதற்கு வெளியிலும் இருக்கக் கூடிய நேர்மையான– தமிழ்ப்பற்றுள்ள அரசியல்வாதிகளையும் இணைத்து புதிய அரசியல்தலைமையை உடனடியாக ஆரம்பியுங்கள்.

நிச்சயம் அது தமிழ் மக்களுக்கு வெற்றி தரும். இதைவிடுத்து இரா.சம்பந்தனுடன் நீங்கள் சேர்ந்து சென்று எவருடன் சந்திப்பு நடத்தினாலும் அது உங்கள் நேர்மையையும் நிச்சயம் மோசமாகப் பாதிக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

# முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு வட மாகாண சபை உதவும் - விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

யாழில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மக்கள் மீளக்குடியேற வடமாகாண சபை அனைத்து நடவடிக்கையும் எடுக்கும் என்று வடமாகாண முதலமைச்சரும், முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.15 மணியளவில் யாழ்.பொது நூலகத்தில் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கத்தினர் முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவர்களுடைய மீள் குடியமர்வுகளில் உள்ள பிரச்சினைகள் தொடர்பாக வட மாகாண முதலமைச்சர் மற்றும் மன்னார் மாவட்ட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடினர்.

இக் கலந்துரையாடலின் பின்னர் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில,

தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கு தற்போது பல பிரச்சினைகள் இருக்கின்றது. குறிப்பாக 1990 ஆம் ஆண்டு யாழில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மக்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களுடைய சொந்த நிலங்களில் மீள் குடியேறிக் கொள்வதில் பல பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள்.

அதாவது யாழில் இருந்து வெளியேறிய முஸ்லிம்கள் திரும்பவும் யாழில் உள்ள அவர்களுடைய சொந்த நிலங்களில் குடியேறும் போது அவர்களுடைய குடும்பங்களின் முன்னர் இருந்ததையும் பார்க்க எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இதனால் அவர்கள் பிரிந்து பிரிந்து குடியேறிக் கொள்ள வேண்டிய நிலை உள்ளது. எனவே அவர்கள் தொடர்பாக புள்ளிவிபரங்கள் மற்றும் ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொண்டால் மட்டுமே அதற்கான தகுந்த தீர்வினை நோக்கி நாம் நகர முடியும்.

அதைவிட காணி, தொழில், கல்வி அவர்களுக்கு இருக்கும் அத்தனை பிரச்சினைகளும் எங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் இருந்து அவர்களை மீட்டு அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்க வட மாகாண சபை மூலம் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிசீலனை செய்து பார்த்தோம்.

அதன் அடிப்படையில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் அனைத்தினையும் கண்டறிய விசேட ஆணைக்குழு ஒன்றினை நியமிக்க உள்ளோம். அவ்வாறு ஆணைக்குழு ஒன்று செயற்பட நாங்கள் நடவடிக்கை எடுத தோமானால் அந்த ஆணைக்குழு முஸ்லிம் மக்களுடைய சகல பிரச்சினைகள் தொடர்பாக அறிந்து, அப்பிரச்சினைகளை தன்வசம் ஈர்த்து, அது சம்மந்தமான செய்திகளை மற்றும் நிகழ்வுகளை அறிக்கையிட்டால் அதனை அடிப்படையாக கொண்டு எதிர்கால நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்று கருதியுள்ளோம். அது சம்மந்தமாகவும் நாங்கள் தொடர்ந்து பேசித் தீர்ப்பதற்கு முடிவு எடுத்துள்ளோம்.

ஆனால் கொள்கை அடிப்படையில் வட மாகாண சபை உறுப்பினர்கள் அனைவரும் முஸ்லிம் மக்கள் எங்களுடைய தமிழ் பேசும் சகோதரர்கள் என்ற முறையில் திரும்பவும் அவர்கள் இருந்த இடங்களுக்கு குடியேற சகல வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை என்று வலியுறுத்திக் கூறுகின்றேன்.

அடுத்த சில நாட்களில் இவ்விடயம் சம்மந்தமாக பரிசீலனை செய்யவுள்ளோம். அவர்கள் எங்களுடன் சேர்ந்து பேசித்தீர்க்க முன்வந்தது எங்களுக்கு ஒரு வலுவாகவும், நன்மையாவும் உள்ளது. எங்களுக்குள்ளே பேசாது விடயங்களை புரிந்து கொள்ளாமல் இதுவரைகாலமும் பல பிரச்சினைகளை எதிர் கொண்டோம்.

அதை விடுத்து நேரடியாக பேசித் தீர்க்க வந்த மக்களுக்கு நான் நன்றி கூறுகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (செ-4)

# போலிக் கடனட்டைகளில் ரூ.17 இலட்சம் கொள்ளை

## ஐவர் கைது

(கொழும்பு)

போலி கடனட்டைகளை பயன்படுத்தி வங்கிகளின் தன்னியக்க இயந்திரங்களின் ஊடாக 17 இலட்சம் ரூபாவை கொள்ளையடித்ததாக கூறபடும் ஐவரை வெள்ளவத்தை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

தெஹிவளை, ஆபோன்சு மாவத்தையிலுள்ள வீட்டில் வைத்தே குறித்த நபர்களை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து போலி கடனட்டைகள் 500, கடனட்டை விபரங்களை அடங்கிய மென்பொருள் ஆகியவற்றையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாட்டு கணக்குகளிலேயே அவர்கள் கூடுதலாக பணத்தை மீள எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

24 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்ட இவர்கள் யாழ்ப்பாணம், கொட்டாஞ்சேனை மற்றும் ராஜகிரிய போன்ற பகுதிகளை வதிவிடமாக கொண்டவர்கள் என்றும் அடிக்கடி வெளிநாடுகளுக்கு சென்று வருபவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

# மருதங்கேணி பொதுச்சந்தை குப்பைகளால் நிறைகின்றது

## பரு.பிரதேச சபை கவனிக்குமா?

(பொற்பதி)

பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் இயங்கும் மருதங்கேணி பொதுச் சந்தையின் வளாகம் குப்பைகள் நிறைந்து காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மருதங்கேணி பொதுச்சந்தையின் நடவடிக்கைகள் வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் சந்தையின் வளாகமும் துப்புரவு இன்றி காணப்படுவதையிட்டு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு இனிவரும் காலங்களில் சந்தையின் நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்து வளாகத்தினையும் அபிவிருத்தி செய்து சுத்தமாக வைத்திருக்க பருத்தித்துறை பிரதேச சபையினர் முனவர வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-9,64)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மௌனநோன்பு



பொதுவாக மௌனநோன்பில் இருவகை உண்டு.

1.ஒரு செயலைச் செய்து முடிக்கவேண்டுமென்று மன உறுதியோடு சங்கற்பம் செய்து கொண்டு அவ்வேலை முடியும் வரையில் பேசாமல் இருப்பது. இது மனதையும் உடலாற்றலையும் சிதறாமல் காத்து தான் விரும்பும் செயலை வெற்றியோடு முடிக்கத் துணைசெய்யும்.

2.ஆன்ம தூய்மைக்காக குறிப்பிட்ட காலத்தை ஒதுக்கிவைத்துக்கொண்டு குடும்பம், பொருளாதாரம், வாணிபம் இவைகளிலிருந்து விலகிக்கொண்டு மௌனமாக இருந்து அகத்தாய்வு செய்து கொள்ளுதல். இந்த இருவகை மௌனநோன்புதான் நல்ல நோக்கத்தோடு பயன் விளைக்கத்தக்க வகையில் திட்டமிட்டு ஆற்றுவதாகும்.

குண்டலினி யோகத்தில் துரியாதீத தவம் ஆற்றும்போது புலன்கள், அறிவு, இச்சைகள் அனைத்தையும் அடக்கி அறிவை இருப்பு நிலையான சிவமாக்கிக் கொண்டு பேச்சற்று இருக்கின்றோம். இது மௌனநோன்பில் சேராது. இது அறிவின் இயக்கத்தைச் சீரமைக்க நாள்தோறும் சிறிது நேரத்தை ஒதுக்கிக்கொண்டு குறுகிய கால அளவில் செய்யும் உளப்பயிற்சி ஆகும். நான் பேசாத போது இறைவன் பேசிக்கொண்டிருக்கிறான் என்பது அறிவறிந்தோர் காட்டும் குறிப்பு. நாம் பேசாமல் இருக்கும்போது கண்களை மூடிக்கொண்டு அமர்ந்துகொண்டால் எத்தனை, எத்தனை எண்ணங்கள் எழுச்சி பெற்று உணர்த்துகின்றன. இந்த எண்ணங்களை நீங்கள் உண்டு பண்ணுகிறீர்களா? நாம் உண்டு பண்ணுவதும் இல்லை. அது நம் விருப்பத்துக்கு அடங்குவதும் இல்லை.

பின்னர் நமது எண்ணங்களை நமது உள்ளங்களிலிருந்து அலையலையாக எழுப்பிக் கொண்டிருப்பது யார்வேலை? யாருமில்லை இறைவனே தான். எவ்வாறு? உடல் உறுப்புக்களின் மூலம் உணரும் இன்ப துன்பங்கள் அனைத்தும் உயிர் மையத்திலுள்ள இருப்பு நிலையாகிய அறிவு சீவகாந்த ஆற்றலால் படர்க்கை நிலையெய்தி மனமாக இயங்கி உணர்கின்றது. மனத்தால் உணரும் அனைத்தும் அலை வடிவில் உயிர் மையத்திலிருக்கும் இருப்பு நிலையால் ஈர்க்கப்படுகின்றன. அவை உயிர்த்துகள்களில் பதிவாகின்றன. உயிர்த்துக்கள்கள் சுழற்சியால் உயிரில் பதிந்த பதிவுகளின் தன்மைகள் யாவும் அதன் விரிவுஅலை மூலம் எப்போதும் வெளியேறிக்கொண்டே இருக்கின்றன.



வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு மற்றும் காணாமற்போனோரை தேடும் உறவுகளின் சங்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நேற்று வவுனியா கந்தசுவாமி கோவில் வீதியில் நடைபெற்ற மாபெரும் தீப்பந்தப் போராட்டத்தின்போது... (படங்கள்:- பூந்தோட்டம், குருமன்காடு செய்தியாளர்கள்)

# இன்னல் நிறைந்த வாழ்வுடன் இத்திமடு கிராமம் அவதி

(பூந்தோட்டம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இத்திமடு கிராமம் அடிப்படை வசதிகளின்றி காணப்படுவதன் காரணமாக அங்கு வாழும் சுமார் 67 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறுதி யுத்தத்தின் போது பல்வேறு பாதிப்பு க்களுக்கு முகம்கொடுத்த இம் மக்கள் இடப் பெயர்வுகளின் போது தமது அனைத்து சொத்துக்களையும் இழந்து வெளியேறிய நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போதிலும் இவர்களுக்கு எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியேற்றத்தின் போது அரச சார்பற்ற நிறுவனங்களால் 6 மாதங்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என்ற உறுதிமொழியோடு வழங்கப்பட்ட தற்காலிகள் வீடுகள் தற்போது சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டபோதிலும் இது வரை 5 பேரைத் தவிர ஏனையோருக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்படவில்லை என தெரிவிக்கும் இக் கிராம மக்கள் தமக்கு அடிப்படை வசதிகளையேனும் ஏற்படுத்தி தருமாறு கோருகின்றனர்.

இதேவேளை அக்கிராமத்திற்கு குடிநீர் வசதிகள் இன்மையால் தாம் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுப்பதாக தெரிவிக்கும் இவர்கள் கிணறுகளைப் புனரமைப்பதற்கு எவரதும் உதவிகள் கிட்டாமலும் அவற்றை சொந்த செலவில் புனரமைக்க கூடிய பொருளாதார வசதிகள் தம்மிடம் இல்லாமலும் உள்ளதால் தாம் குடிநீரின்றி பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றனர்.

மேலும் முல்லைத்தீவு நெடுங்கேணி பிரதான வீதியில் அமைந்துள்ள அக் கிராமம் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட போதிலும் தமது நிலைமைகளை அதிகாரிகள் கண்டு கொள்வதில்லை என கூறும் அம் மக்கள் தமது கிராமத்திற்கு மின்சார வசதிகள் இன்மையால் இரவுவேளைகளில் கிராமத்திற்கு அயலில் உள்ள காட்டுப்பகுதியில் இருந்து வரும் காட்டு விலங்குகளின் தொல்லைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுவதாகவும் முறையிட்டுக்கொள்கின்றனர்.

சுகாதார வசதிகள் ஏதுமின்றி உள்ள இக் கிராமத்திற்கு நடமாடும் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி தரும் பட்சத்தில் தாம் நீண்ட தூரம் வயோதிபர்களை அழைத்து செல்ல வேண்டிய தேவை ஏற்படாது எனவும் சுட்டிக் காட்டும் இவர்கள் தமது குளம் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் போது உடைப்பெடுத்த போதிலும் இதுவரை திருத்தம் செய்து தரப்படாமையினால் தமது விவசாயமும் பாதிப்படையும் நிலையில் உள்ளதாக தெரிவித்துள்ளதுடன் கால்நடைகளுக்கும் இதன் காரணமாக நீர் வசதி இல்லது போயுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இன்னல்களே வாழ்வாகிப் போயுள்ள தமது கிராமம் தொடர்பாக உரிய அரச அதிகாரிகள் கவனத்திலெடுத்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அம்மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கி ன்றனர். (செ-5-266)

## இருளைப் படைத்தல் நூல் வெளியீடு

(பூந்தோட்டம்)

வவுனியா தமிழ் மாமன்றத்தினால் வெளியிடப்படும் பா.திலீபன், செ.மதுரன் ஆகியோ[ர்] எழுதிய **இருளைப் படைத்தல்** எனும் கவிதை நூலின் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெயராஜின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெறவுள்ளதுடன் தமிழ் மாமன்றத்தினால் நடத்தப்பட்ட **வன்னியின் வாதச்சமர் நிகழ்வில்** வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (செ-5-266)




# அமைச்சர் தொண்டமான் மன்னார் விஜயம்



(மன்னார்)

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று சனிக்கிழமை மாலை திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு மன்னாருக்குச் சென்றுள்ளார்.

மன்னாருக்கு நேற்று வருகை தந்த அவர் தலைமன்னார் பியர் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்குச் சென்று அப்பகுதியிலுள்ள இந்திய வம்சாவழி மக்களையும், ஆலய பரிபாலன சபையினரையும் சந்தித்து அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து தலைமன்னார் துறைமுகத்திலுள்ள கடற்படை முகாமிற்குச் சென்று கடற்படையினருடனும் அமைச்சர் உரையாடல்களை மேற்கொண்டார். (செ-2)

# அனுமதி இன்றி பயன்தரு மரங்கள் வெட்டப்படுவதாக மக்கள் விசனம்

(பூந்தோட்டம்)

வவுனியாவின் பல பிரதேசங்களிலும் உரிமையாளரின் அனுமதியின்றி மின்சாரசபையினரால் பயன்தரு மரங்கள் வெட்டப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,

புதியதாக மின் இணைப்புகளை வழங்குவதற்காகவும் முன்னையதாகவே மின் இணைப்புகள் வழங்கப்பட்ட இடங்களில் மின கம்பிகள் மற்றும் மின் கம்பங்களுக்கு இடையூறாக உள்ள பயன்தரு மரங்களை மின்சாரசபையினர் வெட்டி வருவதாகவும் இதன் காரணமாக நீண்ட காலமாக வளர்க்கப்பட்ட மரங்கள் பயன்தரும் வேளையில் வெட்டப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வீட்டில் எவரும் இல்லாத நேரங்களில் வீட்டு வளவினுள் பிரவேசிக்கும மின்சார சபையினர் மரங்களை வெட்டிச் செல்வதாகவும் மின்சார சபையினரின் இவ்வாறான செயற்பாடுகள் விசனத்திற்குரியவை எனவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் வெட்டப்படும் மரங்களை அக[ற்]றாமல் செல்வதனால் வீட்டில் தனித்து வா[ழ்]பவர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா மின்சார சபையுடன் தொடர்பினை ஏற்படுத்தியிருந்த போதும் பதிலளிக்ககூடிய அதிகாரி அங்கிருக்கவில்லை. (செ-5-266)

# இந்திய வீட்டுத் திட்ட வீடுகளுக்கு வசதிகள் பூர்த்தியாக்கப்படவில்லை

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள தெளிகரை கிராமத்தில் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 50 வீடுகள் அமைக்கப்பட்டு மக்கள் குடியேற்றப்பட்டு ஒருவருடமாகியும் தமது அடிப்படை வசதிகள் எவையும் பூர்த்தியாக்கப்படவில்லை என அம்மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதன்படி போக்குவரத்து, மின்சாரம், குடிநீர் போன்றவற்றை பெற்றுக்கொள்வதில் தினமும் பல சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாக குறித்த பகுதியில் உள்ள 50 வீடுகளுக்கும் மின் இணைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் மின்சாரம் விநியோகிக்கப்படவில்லை.

இதனால் இப்பகுதி முழுவதும் இரவு நேரங்களில் கடும் இருளில் மூழ்குவதாக தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பகுதியில் கிணறுகள் இல்லாமையால் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாக குறிப்பிடும் இவர்கள் தமது அன்றாட அடிப்படையான நீர் தேவைகளைக்கூட திருப்தியான முறையில் பூர்த்தி செய்யமுடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பூநகரி, மன்னார் பிரதான வீதியை சென்றடையக்கூடிய குறுக்குத் தெருக்களில் காடுகள் அழிக்கப்பட்ட இலை குழைகள் உட்பட்ட பல கழிவுப் பொருட்கள் வீசப்பட்டுள்ள நிலையில் உள்ளமையால் இப்பாதைகளில் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

மேலும் இவ்வீதிகள் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாகவும் போக்குவரத்தில் பெரும் சிரமங்கள் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வீடுகளை மட்டும் அமைத்துக் கொடுத்துவிட்டு தமது பணி நிறைவடைந்து விட்டதாக எண்ணியிருக்கும் அதிகாரிகள் தமது மேற்படி இன்னல்கள் குறித்து தக்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென தெளிகரை கிராம மக்கள் கோரியுள்ளனர். (செ-5-84)

# பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு -2013












## மகிந்தவுக்கு இன்று பிறந்த தினம்



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்றைய தினம் தனது 68-வது பிறந்த தினத்தினை அலரிமாளிகையில் தனது குடும்பத்தினருடன் வெகு ஷிமர்சையாகக் கொண்டாடவுள்ளார்.

நேற்றைய தினம் பொதுநல வாய அமைப்பின் தலைவராக ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ள நற்செய்தியுடன் இன்றைய தினம் அவர் தனது பிறந்த தினத்தினைக் கொண்டாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## இலங்கை மக்...

காக்கும் கடமையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் . இலங்கையில் உள்ள சகலருக்கும் சம உரிமைகள் வழங்கப்படும்.

சில விடயங்கள் தொடர்பில் நல்லிணக்க செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 30 வருடங்களாக இருந்து வந்த பிரச்சினைகளுக்கு ஒரு இரவில தீர்வுகளை காண முடியாது.

இதற்கு காலம் அவசியம். ஒரு நபர் ஏற்றுக்கொள்ளும் தீர்வல்லை. சகலரும் ஏற்றுக்கொள்ளும் தீர்வை வழங்க வேண்டும் என்பதே எனது தேவையாகும்.

மனித உரிமைகள், ஜனநாயகம் போன்ற பொதுநலவாயம் மதிக்கும் விடயங்களுக்கு இலங்கையும் மதிப்பளித்து வருகிறது. அதே போல இலங்கையின் சட்டத்திற்கும், அரசியல் அமைப்புக்கும் சர்வதேசம் மதிப்பளிக்க வேண்டும் என்றார் ஜனாதிபதி. (செ-4)

## பொதுநலவாய...

கடும் எதிர்ப்பிளை வெளியிட் டுள்ள

சபையின் இவ் அறிவிப்பினாலும் அச்சமடைந்திருக்கும் என்பது சந்தேகம் இல்லை.

பொதுநலவாய மாநாட்டினை இலங்கையில் நடத்துவதற்கு பகீரத முயற்சி எடுத்துக் கொண்ட அரசு இவ் மாநாட்டினால் நிறையவே சங்கடங்களை எதிர்நோக்கியுமுள்ளது. சர்வதேச தலைவர்கள், சர்வதேச ஊடகவியலாளர்கள் தொடர்ந்தும் இலங்கை அரசுக்கு தலையிடியினை கொடுத்த வண்ணம் உள்ளனர். (செ-4)

தமிழ் அரசியல், உலகத் தலைவர்களும் மனித உரிமைகள் மேம்பாடடையாத அல்லது மதிக்கப்படாத ஒரு நாட்டின் தலைவரினை பொதுநலவாய அமைப்பின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளமை கண்டிக்கத்தக்கது என கண்டனமும் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை அடுத்த பொதுநலவாய மாநாடு 2015இல் மால்டாவில் இடம்பெறவுள்ள நிலையில் இம்மாநாட்டுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே தலைமை தாங்குவார் என தெரிவிக்கப்படுகின்றது. (செ-4)

## இலங்கை மீது ...

பதியப்பட்டுள்ளன.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். இவர்களில் இசைப்பிரியா, பாலச்சந்திரன் ஆகியோர் இராணுவத்தினரால் கொல்லப்பட்ட சம்பவங்கள் ஊடகங்களினால் வெளிக்கொண்டு வரப்பட்டதையடுத்து இறுதிப் போரில் இராணுவம் எவ்வாறு செயற்பட்டுள்ளது என்பதனை அனைவரினாலும் ஊகிக்க முடியும்.

ஆகையனால்' கடந்த காலங்களில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட நபர்கள் தண்டிக்கப்படவேண்டியது அவசியமானதாகும். யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், அநீதி இழைக்கப்பட்ட மக்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும்.

அவற்றினை பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு சர்வதேச சமூகம் இலங்கை மீதான அழுத்தங்களினை தொடர்ந்தும் பிரயோகித்துக் கொண்டிருக்க வேண்டும் என வலியுறுத்திய ஸ்ரீவ், அரசின் அடக்குமுறைகள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளின் போது அம்பலமாகியது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய மாநாட்டினை இந்தியப் பிரதமரும், கனடா, மொரிஷியஸ் ஆகிய நாடுகளும் புறக்கணித்த கவலையிலும், பிரிட்டிஷ் பிரதமர் அறிவிப்பினாலும் அதிர்ந்து போன அரசு சர்வதேச மன்னிப்புச்

## சுயாதீனமான விசார...

ணையைமேற்கொள்ள வேண்டும் என பிரித்தானியப் பிரதமர் டேவிட்கமரூன்நேற்று முன்தினம் சனிக்கிழமை கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன், இலங்கை அரசாங்கம் இவ்வாறு விசாரணைகளை மேற்கொள்ளாது விட்டால், அது தொடர்பில் சர்வதேச விசாரணையை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் பிரித்தானியா கோரிக்கை விடுக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

பிரித்தானியப் பிரதமரின் இந்தக் காலக்கெடுவை நிராகரித்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இது போன்ற சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இது குறித்து நேற்று கருத்து வெளியிட்டுள்ள பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக், இந்த விவகாரம் தொடர்பில் பிரித்தானியா இலங்கைக்கு தொடர்ந்து அழுத்தங்களைப் பிரயோகிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் சுயாதீனமான ஒரு விசாரணையை ஆரம்பிக்கும் சாத்தியமுள்ளதாக வில்லியம் ஹேக் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்:

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம ஒருபோதும் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொள்ளாது என சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்கள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டி வருகின்றமை தெரிந்ததே. (செ-4)

## நியூசிலாந்து பிர...

நியூசிலாந்துப் பிரதமரின் கரிசனைகள் தொடர்பில் பதிலளித்த ஜனாதிபதி, காணாமல் போனவர்களை கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதனிடையில், யாழ்ப்பாணத்துக்கு கடந்த 15-ம் திகதி விஜயம் செய்திருந்த நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## தீப்பந்தப் போராட்...

எங்கள் பிள்ளைகள எங்கே, கொலைகார பூமியில் பொதுநலவாய மாநாடா?, வெளியேறு... வெளியேறு படையினரே வெளியேறு, எங்கள்வீடுகளை எம்மிடம் தா, காணாமல் போனவர்கள் தொடர்பில் பதில் சொல், சர்வதேச விசாரணை தேவை என கோசங்களை எழுப்பியவாறு இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத்துடன், எனக்கு அப்பாவைப் பார்க்க ஆசையாக உள்ளது - அவரைக் காட்டுங்கள எனக்கு அண்ணாவைப் பார்க்க ஆசையாக உள்ளது - அண்ணாவை விடுவியுங்கள், அரசே நீ கடத்திச் சென்றவர்கள் எங்கே போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

இப்போராட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா. செல்வம் அடைக்கலநாதன்,, சிவசக்தி ஆனந்தன் மற்றும் வட மாகாண சபை அமைச்சர் வைத்தியகலாநிதி ப. சத்திபலிங்கம், உறுப்பனர்களான வைத்திபகலாநிதி சி.சிவமோகன், எஸ்.ரவிகரன். ஜி.ரி.லிங்கநாதன், ம.தியாகராசா, இ.இந்திரராசா ஆகியோரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணியின வன்னி மாவட்டத் தலைவர் இரா.இராஜதகனேஸ்வரன், பிரஜைகள் குழுவின் தலைவர் கே.தேவராசா,

ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்ட இப்போராட்டத்தின் இறுதியில், ஏ9 வீதியில் பேரணியாகச் சென்ற காணாமல் போனேரின் உறவுகள் வவுனியா செயலகத்தில் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

கொழும்பில்பொதுநலவாய மாநாடு இடம்பெறும் வேளையில், தமது மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி வலிகாமம் வடக்கு மற்றும் சம்பூர் மக்கள் நடத்தியிருந்த போராட்டத்தைத் தொடர்ந்து, இப்போராட்டம் வவுனியாவில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.(செ-266, 250,4)



# வேலைவாய்ப்பு

**அரச துறை:** காணி அமைச்சு-நில அளவைத் திணைக்களத்தில் 4 பதவிகள் மற்றும் 7 பதவி நிலைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சில் 24 பதவி நிலைகள்... மற்றும் இலங்கை வங்கி உள்ளிட்ட வங்கி வெற்றிடங்கள்.
**தனியார் துறை:** வீரகேசரி மற்றும் நியூஸ் பெஸ்ட் ஊடகங்கள், மாகா உட்பட்ட கட்டுமான நிறுவனங்கள் மற்றும் முன்னணி நிறுவன விற்பனை பிரதிநிதிகள், சேவ்த சில்ரன் போன்ற அமைப்புகளில் **தற்போது கோரப்பட்டுள்ள** வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல்,ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு.. **021 320 2787**

**கோலாசிற்றி** தொழில் வங்கி இனி நாம் இருக்கிறோம்
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். நேரில் வரவும்
(4515)

# ALLIANCE FRANÇAISE DE JAFFNA

*Learn French The French Way*
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



**யார் AF இல் French படிக்க முடியும்?**
திருமணம் மூலம் France, Canada... செல்வோர், வெளிநாடுகளில் தொழில் புரிய/கல்விகற்க செல்வோர், மாணவர்கள் மேலும் French கற்கவிரும்புவோர்... இங்கு வடமராச்சி, வன்னி, வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த பலரும் படிக்கிறார்கள்.

- *Videos* for listening & speaking practice : "*Bienvenue en France*" Episode N°. 1,2,3,4...
- *Teaching materials* are given with *free* of charge. (ஆங்கில அறிவு அவசியமில்லை)
- Elementary level - 1 (6 Months, 100 Hours, CERTIFICATE course)
- Letter in French : 6 மாதத்தினை நிறைவுசெய்யாதோருக்கு / Embassy க்கு (Free)
- Translations in French : பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்கள். மேலும் நூலக வசதி...

**கவனிக்கவும்:**
DELF A1 பரீட்சை : 14.12.2013 பரீட்சைக்கு தோற்றுவோர் AF ஊடாக விண்ணப்பிக்கலாம்.
பரீட்சை கட்டணம் : 3000 Rs. (AF மாணவர்களுக்கு) 8500 Rs. (ஏனையோருக்கு). இப்பரீட்சையை ஏதாவதொரு AF இல் மட்டுமே எழுத முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.
இதற்கான "தயார்ப்படுத்தல் வகுப்பு" சனி, ஞாயிறு at 8.30 am

> Just say "Yes, I can... speak French"
*AF is the only International Organization for French in Northern Province*

புதிய வகுப்பு விரைவில்
(4491)

61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093 / நேரிலும் வரலாம்
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

# கணினி திருத்தம்

உங்கள். கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

பிந்திய அதிரடியா.......? அல்லது சுவீப் அடியா......?
# உடனடித் தொழில் வாய்ப்பு

வெறும் ரூபா 150,000/= மட்டும் செலுத்தி கட்டார் விமான நிலையத்தில் உடனடி வேலையில் இணைவதற்கான அரிய சந்தர்ப்பம்
- மாதாந்தம் ரூ50,000/= சம்பளம்
- உணவு, தங்குமிடம் இலவசம்


30 பேருக்கு மட்டுமே இச்சலுகை
நாட்களினுள் பயணம்
2 வருட WORK VISA
தொடர்புகளுக்கு

# போட்டோக்கொப்பி

கலர் பிறிண்ட் 5/=
A4 இருபக்கம் 1.80சதம்
A3 இருபக்கம் 3.50சதம்
அச்சுப் பதிப்புக்கு இன்னும் பல நியாய விலை எம்மிடம் மட்டுமே
கொழும்பு பிறிண்டேர்ஸ்
T.P : 021 221 7030, 0771974875
666 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

# Mind Vision
Technology CAMPUS
(இல.4, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
யாழ் பெருமாள் கோவிலுக்கு அருகாமையால்)
(C-5499) 077 933 93 53

# Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(C-5500)

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101

# துரித பொதிகள் சேவை
குறைந்த விலையில் விரைவான சேவை
விஷேட சலுகை - லண்டன்-5kg 4250/= 10kg 7000/=
ஜேர்மனி - 05kg 4500/= 10kg 7500/=
மேலும் பல நாடுகளுக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளது
வரி இன்றி இருப்பிடம் தேடிக் கொடுக்கப்படும்
**பிரணவன் என்ரபிறைசஸ்**
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(சங்கிலியன் சிலைக்கு முன்)
**கிளிநொச்சியில்**
தொண்டமான் நகர்,(புதிய வைத்தியசாலை முன்)
தொடர்புகளுக்கு- 077-3818799
(C-550


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.